# மாலை தீப்பொறி

MALAE THEEPORI





2024 டிசம்பர் 1-31 தொகுதி 23 இதழ் 9 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


## தோழர் என்கே நினைவேந்தல் பேரணி




## அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவே பதவி விலகு! மோடி அரசே தேசத்திடம் மன்னிப்பு கேள்!!



# ஒரே சமயத்தில் தேர்தல் மசோதா ஜனநாயகம்; கூட்டாட்சிமுறையின் அடிப்படை உணர்வையே வேரறுக்கக் கூடியதாகும்: இகக(மாலெ)

2024, டிசம்பர் 17 அன்று மோடி அரசாங்கம், ஜனநாயக விரோதமானதும், அரசமைப்புச்சட்ட விரோதமானதுமான ஒரேசமயத்தில் தேர்தல் என்பதை குறிவைத்து இரண்டு மசோதாக்களை முன்மொழிந்திருக்கிறது. 129 வது அரசமைப்புச் சட்ட மசோதா, 2024, யூனியன் பிரதேச சட்டங்கள் திருத்த மசோதா 2024 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இகக(மாலெ) மக்களவை உறுப்பினர்கள் ராஜாராம் சிங், சுதாமா பிரசாத் இருவரும் கூறியிருப்பதாவது: 'ஒரு நாடு, ஒரு தேர்தல் அல்லது ஒரே சமயத்தில் தேர்தல், ஜனநாயக விரோதமானது, பாஜக வின் இந்த ஆசைக் கருத்து, அரசமைப்புச் சட்டத்தின் ரத்தஓட்டமான ஜனநாயகம், கூட்டாட்சிமுறை ஆகியவற்றின் அடிப்படை உணர்வையே வேரறுக்கும் திட்டமாகும். 'ஒரு நாடு, ஒரு தேர்தல்' என்ற பேரால், அரசியல் கடிகாரத்தை பாஜக பின்னோக்கி திருப்ப முயற்சிக்கிறது; அரசமைப்புச்சட்ட திருத்தங்கள் வாயிலாக அரசியலில் மத்தியத்துவக் கட்டுப்பாட்டைத் திணிக்க முயற்சிக்கிறது.

'ஒரு நாடு, ஒரு தேர்தல்' குறித்து கருத்து தெரிவித்த இகக(மாலெ) பொதுச்செயலாளர் திபங்கர் பட்டாச்சார்யா, இந்த திட்டத்தை முன்செலுத்தும் சங்-பாஜக உண்மையில் அதிகாரத்தை அதீத மய்யப்படுத்தவும் இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரம், பன்மைத்துவ அரசியல், கூட்டாட்சி அமைப்புமுறையை வலுவிழக்கச்செய்யவும் இத்திட்டத்தை முன்னெடுக்கிறது என்றார். எல்லா தேர்தல்களையும் ஒன்றாக இணைப்பதன்மூலம் மோடி அரசாங்கம், அந்தந்த தேர்தல்களுக்கே உரிய தனித்துவமான சூழல்பொருத்தத்தைக் களவாடவும் மக்களின் அரசியல் தேர்வைக்கட்டுப்படுத்தவும் விரும்புகிறது. கூட்டாட்சி இந்தியா, மோடி அரசாங்கத்தின் இந்தி-இந்து-இந்துஸ்தான் கொள்கைக்கு துடிப்பான எதிர்ப்பையும் தீர்மானகரமான எதிர்ப்பு போராட்டத்தையும் தந்துகொண்டிருக்கிறது. இந்த கலாச்சார, அரசியல் கடைசலை, இந்தி இதயப்பகுதிக்கு அப்பாலுள்ள மாநிலங்களில் (அதிகரித்த அளவில் இந்தி இதயப்பகுதிக்குள்ளும்) காணமுடிகிறது. இந்தக் கடைசலை அடக்கவும் ஜனநாயக இந்தியாவை பாசிச ஆட்சியின் பேரரசு சதித்திட்டத்துக்கு அடிபணியச் செய்வதற்குமான வாய்ப்பாடே'ஒரு நாடு, ஒரு தேர்தல்' என்று கூறினார். "இந்த சதித்திட்டம், அதிகாரம் பெற்ற குடிமக்களை விசுவாசமான குடிபடையாக கீழ்ப்படுத்தவும் இறுக்கமான பாசிச சட்டகத்துக்குள் இந்தியாவை அடிமைப்படுத்தவும் சட்டம், ஆட்சிமுறை, அரசமைப்புச்சட்ட கட்டமைப்பு இவற்றில் நடந்துவரும் முயற்சிகளை முழுவதுமாகக் கொண்ட ஒரு சட்டமாகும். எல்லா வழிகளிலும் இந்த சதித்திட்டத்தை இந்தியா தோற்கடித்தாக வேண்டுமென தோழர் வலியுறுத்திக்கூறினார்.

ஊராட்சி, நகராட்சி தேர்தல்கள் போலவே சட்டப்பேரவை, நாடாளுமன்ற தேர்தல்களுக்கும் அவற்றுக்கே உரிய குறிப்பான சூழல் பொருத்தங்கள் உண்டு என இகக(மாலெ) வெளியிட்ட செய்திக்குறிப்பொன்று வலியுறுத்திக் கூறியுள்ளது. தளவாட போக்குவரத்துக்காக வேண்டி அனைத்து தேர்தல்களையும் ஒன்றாக இணைப்பது, சட்டப்பேரவை தேர்தல்களுக்கே உரிய தன்னாட்சி அதிகார வரம்பை பறிப்பதும் மய்யப்படுத்தப்பட்ட நிலமைகளுக்கு கீழ்ப்படுத்துவதுமாகும். ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதன்மூலம் தளவாட போக்குவரத்தை எளிமைப்படுத்தாலம் நிதியை சேமிக்கலாம் என்ற அனுமானத்துக்கு எவ்விதமான நம்பத்தகுந்த ஆய்வோ, பகுப்பாய்வு ஆதாரமோ இல்லை. மேலும் ஒரே சமயத்தில் தேர்தல் குறித்த சட்ட ஆணையத்தின் 2018 நகலறிக்கையின்படி 2014 தேர்தல்களுக்காக இந்திய தேர்தல் ஆணையம் ரூ 3586 கோடி செலவு செய்துள்ளது (பத்தி 2.10). இதை மிகச்சரியான கண்ணோட்டத்தில் சொல்லவேண்டுமாயின், பாஜக 2014ல் மத்தியில் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அரசாங்கம் மின்னணு ஊடகங்களுக்காக ரூ3,260.79 கோடி செலவு செய்துள்ளது; அச்சு ஊடகங்களுக்காக ரூ 3,230.77 கோடிகள் செலவு செய்துள்ளது. உண்மையாகவே பணம் மிச்சப்படுத்த வேண்டுமானால் அதற்கான வாய்ப்பு வேறிடத்தில் உள்ளது. ஜனநாயகத்தின் கருவான கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு செலவினத்தை முதன்மையான காரணமாக காட்டமுடியாது. ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்துவதற்கு வழியேற்படுத்தும்விதமாக அரசமைப்புச் சட்டத்தில் விரிவான திருத்தங்களை நியாயப்படுத்தும் முயற்சி, ஒரு நாடு, ஒரு தேர்தல் என்ற இந்த முன்மொழிதல், இந்திய சட்டக்கோட்பாடுகளின்படி, மக்களின் வாக்களிக்கும் உரிமையையும் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் கீழேதள்ளும் முன்மொழிதலேத் தவிர வேறல்ல. நாடாளுமன்ற ஜனநாயகம், பல கட்சி ஆட்சிமுறை, சுதந்திரமான நியாயமான தேர்தல் இவை அனைத்தும் அரசமைப்பு சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பாகும்.

**எம்எல் அப்டேட்**

**– டிசம்பர் 17–23; 2024**

மாலெ தீப்பொறி

**இருவார இதழ்**

***2024 டிசம்பர் 1 - 31***

*தொகுதி 23 இதழ் 9*

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com


**தலையங்கம்**

# வெறும் நிவாரணம் வேலைக்காகுமா?

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் புயல், மழை, வெள்ளம் என்பது விதியாகவே மாறிக் கொண்டிருக்கிறது. நவம்பரில் எந்த மழையையும் தாக்குப்பிடிக்கத் தயார் நிலையில் இருக்கிறது தமிழ்நாடு அரசு என்று முதலமைச்சர் முதல் அதிகாரிகள் வரை பெருமையாகப் பேசிக் கொண்டிருந்த நிலையில், பெஞ்சல் புயல் வந்து புரட்டிப் போட்டது. 23ம் தேதி உருவான புயல் மெல்ல நகர்ந்து நவம்பர் 30ம் தேதி இரவு புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது. அதன் காரணமாக தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. போதாக்குறைக்கு, சாத்தனூர் அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீரால், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பேரழிவு ஏற்பட்டது. ஆயிரக்கணக்கில் ஆடு, மாடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மக்கள் இருந்த வீட்டை, உடைமைகளை அனைத்தையும் இழந்துவிட்டுத் தெருக்களில் தவித்தார்கள். அவர்களுக்கு தமிழ்நாடு அரசு வெறும் 2000 ரூபாய் நிவாரணத் தொகை அறிவித்தது. மக்கள் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்கள். கடந்த ஆண்டைப்போலவே இப்பவும், ஒன்றிய மோடி அரசு பேரழிவுச் சேதத்தை பெயரளவுக்கான சேதம் என்றது. சீரமைப்புப் பணிக்கு ரூ.6675 கோடி ஒதுக்கீடு செய்யக் கேட்டால் வெறும் 945 ரூபாய் மட்டும் ஒதுக்கீடு செய்தது. ஒன்றிய அரசு விடுவித்துள்ள அந்த 945 கோடி ரூபாயும், ஆண்டு தோறும் ஒதுக்கப்பட வேண்டிய பேரிடர் நிதி. இந்த வெள்ளப் பேரிடருக்காக தமிழ்நாடு கேட்ட தொகைக்காக அல்ல. ஒன்றிய அரசு ஓரவஞ்சனை செய்து கொண்டிருக்க, தமிழக அரசோ தட்டிக் கழித்துக் கொண்டிருந்த நிலையில், மீண்டும் டிசம்பர் 12,13,14 தேதிகளில் 2023 டிசம்பர் போலவே தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மாவட்டங்கள் வெள்ளக்காடானது. குளங்கள் உடைந்தன. தரைப்பாலங்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன. தூத்துக்குடி மாவட்டத்தில் வீடுகள் தண்ணீரில் தத்தளித்தன. ஜெயலலிதாவுக்கு ஒரு செம்பரம்பாக்கம் என்றால், ஸ்டாலினுக்கு ஒரு சாத்தனூர் என்றானது. எந்தவொரு அரசும் கடந்த கால அனுப வங்களில் இருந்து பாடம் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. பருவநிலை மாற்றங்கள் காரணமாக, பருவ மழைகள் பொய்த்து புயல் மழைகளே அதிகம் பெய்கின்றன. ஏரி, குளங்கள் தூர் வாரப்படாமலும், ஆக்கிரமிப்புகளாலும் மழைத் தண்ணீர் எல்லாம் கடலை நோக்கிப் போகின்றன. இயல்பாக தண்ணீர் போய்க் கொண்டிருந்த கால்வாய்கள், வாய்க்கால்கள் எல்லாம் சுருங்கிப்போய் தண்ணீரின் போக்கையே மாற்றிவிட்டுள்ளது. நீர் நிலைகளும் தண்ணீர் வழிகளும் கட்டடங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இவைகள் எதுவுமே சரி செய்யப்படவில்லை. நீர் நிலைகளைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு, எளிய உழைக்கும் மக்களின் குடியிருப்புகளை இடித்துத் தள்ளுகிற வேலைதான் நடக்கிறது. கார்ப்பரேட் நிறுவனங்களும் கல்வித் தந்தை! என்று சொல்லிக் கொண்டு நீர் நிலைகளை ஆக்கிரமித்துள்ள கனவான்களும் அரசாங்கத்தால் கண்டு கொள்ளப்படுவதில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது ஒப்புக்கானதாகவும் வெறும் அறிவிப்பு என்பதாகவுமே இருக்கின்றது. இதுவரை இல்லாத அளவு 51 செ.மீ. மழை ஒரே நாளில் பெய்தால் யார்தான் என்ன செய்யமுடியும் என்று சொல்பவர்கள், அதனால் ஏற்பட்ட பேரழிவும் எந்த அளவிற்கு இருக்கும் என்பதையும் உணரமுடியும்தானே. அப்படியிருக்கும்போது வெறும் ரூ.2000மும் ரூ.5000மும் ஒரு குடும்பத்திற்கு எந்த மூலைக்கு? கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நிவாரண உதவிகள் பெயரளவிற்கே கொடுக்கப்படுகின்றன. மீண்டும் அடுத்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி வட தமிழகத்தில் கன மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். தமிழ்நாடு ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றி செப்பனிட்டால் 200 டிஎம்சி தண்ணீர் சேமிக்கமுடியுமென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முழுமையான மாற்று நடவடிக்கைகள் எடுக்காமல் வெறும் நிவாரணங்கள் வேலைக்காகுமா? ❒



# தோழர் வினோத் மிஸ்ராவின் 26வது நினைவுநாள்:

## மத்தியக் கமிட்டியின் அழைப்பு; உறுதிமொழி!

வரலாற்றின் முக்கியமான பிரச்சனைகள் எப்போதும் தெருக்களில்தான் தீர்வு காணப்படுகின்றன என்று தோழர் வினோத் மிஸ்ரா, 1998 டிசம்பரில் மத்தியக் கமிட்டிக்கு அளித்த இறுதிக் குறிப்பின் மூலம் நமக்கு நினைவூட்டியிருந்தார். ஏற்கனவே, தனது அருவறுப்பான தலையைத் தூக்கத் தொடங்கிவிட்டிருந்த பாசிசத்தின் அச்சுறுத்தலுக்கெதிராக அனைத்தும் தழுவிய முன்முயற்சியை மேற்கொள்ளுமாறும், போராட்டத்தை தீவிரப்படுத்துமாறும் இளம் கம்யூனிஸ்டுகளுக்கு தோழர் வி எம் அழைப்பு விடுத்திருந்தார். புரட்சிகர மார்க்சிய சிவப்பு பதாகையை இறுகப்பற்றி உயர்த்திப்பிடிக்கும் ஒரு வலுமிக்க கம்யூனிஸ்ட் கட்சி, கிராமப்புர ஏழைகளின் சக்திமிக்க இயக்கம், காவி-சதிக்கெதிரான அனைத்தும் தழுவிய முன்முயற்சி- திறவுகோலான இம்மூன்றையும் தோழர் வி எம் தனது குறிப்பில் முன்னிறுத்திக் காட்டியிருந்தார். இன்று அவரது இறப்பின் 26வது ஆண்டை நாம் கடைப்பிடிக்கும்போது, அவரது சொற்கள் எப்போதையும் விட இப்போது உண்மையென சுட்டிக் காட்டுகிறது.

மோடி அரசாங்கம், பத்தாண்டுகளுக்கு மேலாக அதிகாரத்திலிருந்து வருகிறது. அரசாங்கத்தின் பாசிச திட்டநிரல் கணிசமான அளவு அம்பலத்துக்கு வந்துள்ளது, அதற்கெதிராக பல முனைகளிலும் நல்லதொரு எதிர்ப்பும் வளர்ந்து வருகிறது. இந்தப் பாசிச பயணத்திற்கெதிரான எதிர்ப்பு, அவ்வப்போது அதற்கு தேர்தல் அடி கொடுப்பதிலும் வெற்றி பெற்றுள்ளது. ஆனாலும் பாசிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் எவ்வளவு மூர்க்கத்தனமாக இருக்கிறார்கள் என்பதை சமீபத்திய அரியானா, மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தல்கள் காட்டியுள்ளன.

இந்தப் பாசிச தாக்குதலை தடுத்து நிறுத்த இன்னும் நீடித்த, சக்திமிக்க மக்கள் எழுச்சி நமக்குத் தேவைப்படுகிறது. பாசிஸ்ட்கள் தங்களுக்குரிய வலுவை மதவெறி வெறுப்பு அணிச் சேர்க்கையிலிருந்தும் சாதி, பால் ஒடுக்குமுறைகளிலிருந்தும், பெருங்குழும அதிகாரத்தின் முழுமையான ஆதரவிலிருந்தும் பெறுகிறார்கள். எனவே, பாசிசத்திற்கெதிரான நமது எதிர்ப்பு, கூர்மையான மதவெறி எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, ஆணாதிக்க எதிர்ப்பு, பெருங்குழும முதலாளித்துவ எதிர்ப்பு முனையைக் கொண்டிருக்க வேண்டும்.

தோழர் விஎம் வழிகாட்டுதலில் கட்சி, வெகுமக்கள் அமைப்புகளின் விரிவான வலைப்பின்னலைக் கட்டத் தொடங்கியிருந்தது; போராட்டங்களின் பலதரப்பட்ட அரங்குகளிலும் தொடர் அணிவரிசை அய்க்கிய முன்னணிகளையும் வளர்க்கத் தொடங்கியிருந்தது. பாசிச அச்சுறுத்தலின் இன்றைய காலகட்டத்தில், இந்தக் கொள்கைகளை, எந்தக் காலகட்டத்தில் இருந்ததைவிடவும் இப்போது இன்னும் அதிக விரிவான வகையில் பின்பற்றி வருகிறோம். வெகு மக்கள் அமைப்புகள், பல்வேறு வர்க்கங்கள், வகுப்புகள், தொழில் பிரிவினருக்கான பரப்புரை மேடைகளுக்கு கூடுதலாக அகில இந்திய அளவிலான எதிர்க்கட்சி அணியின் உறுப்பாகவும் பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் செயல்மிக்க தேர்தல் அணியின் உறுப்பாகவும் இருக்கிறோம். மேற்கு வங்கத்தில் பரந்த இடது ஒற்றுமை வடிவெடுத்து வரும் சில தொடக்க அறிகுறிகளும் கூட காணப்படுகின்றன.

இந்த டிசம்பர் 26ல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கிறோம். எதிர்முரணாக 2025, ஆர்எஸ்எஸ் ன் நூற்றாண்டும் கூட. எனவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டை, கம்யூனிச இயக்கத்தின் புகழ்மிக்க வரலாறு, மரபுக்கு வணக்கம் செலுத்துகிற வகையிலும், இன்றுள்ள சவால்களான பாசிசத்தை தோற்கடிப்பது, மேலும் உண்மையான சமூக மாற்றத்தையும் மானுட விடுதலையையும் அடைவதற்காக சோசலிச, மதச்சார்பற்ற, இறையாண்மை கொண்ட, ஜனநாயக இந்திய குடியரசு என்ற அரசமைப்புச் சட்ட உறுதிப்பாட்டை பாதுகாக்கவும், விரிவுபடுத்தும் விதமாகவும் நினைவுகூர்வோம்.

தோழர் விஎம்மின் 26 வது நினைவு நாளில், இன்றைய சவால்களை எதிர்கொள்ள, அவரது அன்பிற்குரிய கட்சியை எல்லாவகையிலும் வலுப்படுத்திட உறுதி ஏற்போம். சில மாதங்களுக்கு முன்பு, தோழர் ஏகே ராய் அவர்களால் நிறுவப்பட்ட மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் கமிட்டி கட்சியோடு இணைந்ததையடுத்து கட்சி ஜார்க்கண்டில் பெரும் ஊக்கத்தைப் பெற்றது. ஜார்க்கண்டில் பாஜகவை தோற்கடிப்பதிலும் முக்கியமான தன்பாத்-பொக்காரோ தொழிலாளர்

வர்க்க பகுதியிலிருந்து இரண்டு சட்டப்பேரவை தொகுதிகளில் வெற்றி பெறுவதிலும் கட்சிக்கு மிகவும் தேவைப்பட்ட வலுவை அளித்திருக்கிறது. இயக்கத்தில் சேர்ந்துள்ள அனைத்து தோழர்களுக்கும், கட்சி அமைப்புக்கும் இந்திய குடியரசின் இந்த வரலாற்றுக் கட்டத்தில் இகக(மாலெ) மத்தியக் கமிட்டி, தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது. நமது அன்பிற்குரிய நாடு முழுவதுமுள்ள மக்கள் மத்தியில் இகக(மாலெ) வை ஆழமாக கொண்டு செல்லவும், நவீன இந்தியாவின் புரட்சிகர பயணத்தை முன்னோக்கி எடுத்துச்செல்லவும் கட்சியை இன்னும் வலுவான, துடிப்பான இயங்காற்றல் கொண்டதாக ஆக்கவும் கடினப்பட்டு உழைப்போம். இதுதான் தோழர் வி எம்-முக்கும் இகக (மாலெ) வின் மறைந்த எல்லா தலைவர்களுக்கும், தியாகிகளுக்கும் இந்திய கம்யூனிச இயக்கத்துக்கும் ஆகச்சிறந்த புகழ் சேர்ப்பதாக இருக்கும்.


**மத்தியக் கமிட்டி;**

**இகக(மாலெ) (லிபரேஷன்**

# தோழர் என்கே இரண்டாம் ஆண்டு நினைவேந்தல்!

இகக(மாலெ) தமிழ்நாடு முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் என்.கே.நடராஜன் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் டிசம்பர் 10 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன. அவற்றில் குறிப்பாக திண்டுக்கல் மாவட்டம் எரியோட்டில் அவரின் நினைவிடத்தில் உறுதியேற்பு நிகழ்ச்சியும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இகக(மாலெ) மாநிலக் குழு உறுப்பினர் தோழர் சுப்புராமன் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார். வடமதுரை சாலையில் உள்ள கட்சிக்குச் சொந்தமான இடத்தின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த தோழர் என். கே. நினைவுக் கல்வெட்டை, தோழர்களின் முழக்கங்களினூடே, இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ. சங்கர் திறந்து வைத்தார். மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைதம்பி தோழர் என்.கே. நினைவுக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றினார். பின்னர் தோழர் வினோத் மிஸ்ரா, தோழர்பி. வி.சீனிவாசன், தோழர் சங்கரநாராயணன் படங்களுடன், தோழர் என்.கே. நினைவேந்தல் பதாகையுடன், தோழர்கள் அங்கிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, “கார்ப்பரேட் காவிப் பாசிசத்தை தோற்கடிப்போம்! அரசமைப்புச் சட்டம் காப்போம்! குடியரசு காப்போம்! மக்கள் உரிமைகள், வாழ்வாதாரம் காப்போம்!” என்ற முழக்கங்களுடன், எரியோடு பேருந்து நிறுத்தம் அருகில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட மேடையை வந்தடைந்தனர்.

இகக(மாலெ) திண்டுக்கல்-கரூர் மாவட்டப் பொறுப்பாளர் தோழர் மு.இராமச்சந்திரன், தோழர் என்.கே புகழஞ்சலி உரையை முன்வைத்தார். அஞ்சலிக்கு பிறகு இந்திய அரசமைப்பு முகப்புரை வாசிக்கப்பட்டு அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். கூட்டத்திற்கு மாவட்ட நிலைக்குழு உறுப்பினர் தோழர் பா.செந்தில்குமார், வேடசந்தூர் ஒன்றிய



பொறுப்பாளர் தோழர் வெ.சங்கிலி, வடமதுரை ஒன்றிய பொறுப்பாளர் தோழர் பி.செல்வராஜ், பரமத்தி ஒன்றிய பொறுப்பாளர் தோழர் கே.குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இகக(மாலெ) மாநிலக்குழு முன்னாள் உறுப்பினர் தோழர் தேன்மொழி, மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் க.பாலசுப்பிரமணியன், தோழர் என்.கே.யின் சகோதரர் தோழர் விஜயகுமார், மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் எம்.அசோகன், மாவட்ட நிலைக்குழுத் தோழர்கள் எஸ்.முருகேசன், மா.பால்ராஜ், இரா. ரவி, ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் நிறைவுரையாற்றினார்.

தோழர் என்.கே. குடும்ப உறுப்பினர்கள், மாநிலக்குழு உறுப்பினர்கள் மதுரை ஈஸ்வரி, திருச்சி ராஜ்குமார் உட்பட, திண்டுக்கல், கரூர், மதுரை, கோவை, தேனி, திருச்சி மாவட்ட முன்னணித் தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் தோழர் என்கேவிற்கு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தோழர் என்கே விட்டுச் சென்ற கடமைகளை நிறைவேற்றுவோம் !

## ஏஅய்சிசிடியு கர்நாடக மாநில முதலாவது மாநாடு!

ஏ அய்சி சி டியு கர்நாடக மாநில முதலாவது மாநாடு நவம்பர் 24, 25 நாட்களில் தட்சிண கன்னடா மாவட்டத்தில் நடந்தது. மாநாட்டின் ஒரு பகுதியாக தொழிலாளர் பேரணியும் பொது மாநாடும் நடைபெற்றது. கர்நாடக ராஜ்ஜிய ரைத்த சங்கா என்ற விவசாய அமைப்பின் தலைவர் ரவி கிரண் பூனாச்சா, ஏஅய்யுடியுசி யின் கே. வி. பட், தலித் சேவா சமிதியின் பி.கே. சேஷப்பா, மூத்த தொழிற்சங்கத் தலைவர் விஷ்ணு மூர்த்தி ஆகியோருடன் ஏ அய் சி சி டி யு தேசிய தலைவர் வீ. சங்கர், பொதுச் செயலாளர் ராஜீவ் டிம்ரியும் கலந்து கொண்டனர்.

பேரணியில் தூய்மைப் பணியாளர்கள், மதிய உணவுத் திட்டத் தொழிலாளர், ஆட்டோ ஓட்டுநர்கள், கட்டுமானத் தொழிலாளர், சாலையோர வியாபாரிகள், மருத்துவமனைத் தொழிலாளர், தொழிற்சாலைத் தொழிலாளர், ஜவுளித் தொழிலாளர், NAL,HAL,ITI & DRDO உள்ளிட்ட மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனத் தொழிலாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

# வெறுப்பு அரசியலை வேரறுப்போம்! மக்கள் விரோத அரசியலை எதிர்த்து நிற்போம்!

**[டிசம்பர் 10 அன்று திண்டுக்கல் எரியோட்டில் நடந்த தோழர் என் கே நினைவேந்தல் கூட்டத்தில் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்; தமிழ்நாடு கட்சிப் பொறுப்பாளர் தோழர் வீ சங்கர் பேசியதன் ஒரு பகுதி]**

நினைவேந்தல் என்றால் அந்த தோழரின் பெருமைகளை பேசுவது, ஒரு நிகழ்ச்சி நடத்துவது எல்லாம் அவசியம்தான். ஆனால், அத்தோடு நின்று போய்விடக் கூடாது. மாறாக, அந்த தோழரின் லட்சியம், கனவு, நோக்கம் என்னவாக இருந்தது, அதை நிறைவேற்றிட நாம் இன்று என்ன பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதே அடிப்படையானது.

இன்றைய அரசியல் சூழலில் பாசிசத்திற்கு எதிரான போராட்டம் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என தோழர் என் கே விரும்பினார். கட்சி அதற்காக அனைத்து விதங்களிலும் முயற்சித்து வருகிறது. அதில் நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமானது.

சமீபத்தில் நடந்து முடிந்த மகாராஷ்ட்ர, ஜார்க்கண்ட் மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை கவனிக்க வேண்டும். பிஜேபியின் நச்சு பரப்புரைக்கு நல்ல பதிலடி கொடுத்திருக்கிறார்கள் ஜார்க்கண்ட் மக்கள். முன்னாள் முதல்வர் சம்பை சோரன் போட்டியிட்ட ஒரு தொகுதியைத் தவிர வேறு எந்த மலைவாழ் மக்கள் தொகுதிகளையும் பிஜேபியால் வெல்ல முடியவில்லை. மலைவாழ் மக்களுக்கு எதிராக முஸ்லீம் மக்களை நிறுத்திட முனைந்த பிஜேபியின் முயற்சி வெற்றி அடையவில்லை. ஆனால், மகாராஷ்ட்ராவில் மிகக் கடும் முயற்சி எடுத்து, பல்வேறு தில்லுமுல்லுகள் செய்து வெற்றி பெற்றிருக்கிறது பிஜேபி. பதிவான வாக்குகளை விட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது. அதற்கு தேர்தல் ஆணையத்திடமிருந்து எந்தவித பதிலும் இல்லை. மகாராஷ்ட்ர தேர்தல் முடிவுகள் வாக்குச் சீட்டு முறைக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே இருக்கிறது.

பிஜேபி ஆட்சியில் நாடு முழுவதும் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டத்தை அகற்றி அதனிடத்தில் மனு ஸ்மிருதியை நிறுவிட அனைத்துவிதமான முயற்சிகளும் நடந்து வருகின்றன. அதனால்தான், நவம்பர் 26, இந்திய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள், முதல் ஜனவரி 26 இந்தியக் குடியரசு உருவாக்கப்பட்ட நாள் வரை “அரசமைப்புச் சட்டம் காப்போம்” எனும் பரப்புரை இயக்கத்தை மா-லெ கட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. அரசமைப்புச் சட்ட முன்னுரையிலிருந்து ”மதச்சார்பற்ற” எனும் சொல்லும் ”சோசலிசம்” எனும் சொல்லும் நீக்கப்பட வேண்டும் என உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அப்படி நீக்க முடியாது, அது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

பாராளுமன்றத்தில் தொடர் போராட்டம் நடந்து வருகிறது. அமெரிக்க நீதி மன்றத்தால் பிடி வாரண்டு வழங்கப்பட்ட அதானியை பாதுகாக்க எத்தனிக்கிறது மோடி அரசு. வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம் என்கிற அமெரிக்க சட்டப்படி, லஞ்சம் கொடுத்து ஆர்டர் பெறுவது குற்றம். ஆனால் அதானி, சூரிய மின்சாரம் தயாரிக்கும் ஆர்டர் பெறுவதற்காக பல மாநிலங்களில் உள்ள அதிகாரிகளுக்கு அரசியல்வாதிகளுக்கு சுமார் 2400 கோடி ரூபாய்




லஞ்சம் கொடுத்தார் என அமெரிக்காவின் உளவு நிறுவனம் நீதி மன்றத்தில் நிரூபித்ததனால் இந்த பிடி வாரண்ட் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அமெரிக்க நீதிமன்றத்தால் குற்றவாளி என கூறப்பட்ட அதானி ஊழல் குறித்து ஒரு விசாரணை நடத்தக் கூட மோடி அரசு தயார் இல்லை. அதற்கு எதிராகத்தான் அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து பத்து நாட்களுக்கும் மேலாக பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடத்திக் கொண்டிருக்கின்றன. நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஸ்தம்பித்துக் கிடக்கின்றன. ஆனாலும், அதைப்பற்றி மோடி அரசு சற்றும் கவலைப்படவில்லை. அதானியை உடனடியாக கைது செய்ய வேண்டும். தமிழ்நாடு, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் அதானியின் சூரிய ஒளி மின்சார தயாரிப்பு நிறுவனம் போட்டிருக்கும் அனைத்து ஒப்பந்தங்களையும் ரத்து செய்ய வேண்டும் என எம் எல் கட்சி கோருகிறது.

வழிபாட்டுத் தலங்கள் சட்டம் என ஒரு சட்டம் 1991 ல் இயற்றப்பட்டது. அதன்படி, எந்த ஒரு கோவிலோ, மசூதியோ, தேவாலயங்களோ, எந்த ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் அதன் தன்மையை மாற்ற முடியாது என அந்தச் சட்டம் கூறுகிறது. அயோத்தியில் பாபர் மசூதி ஏற்கனவே இடித்து தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. உச்ச நீதி மன்றம் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோவில் இருந்ததற்கான எந்த வரலாற்றுச் சான்றுகளும் இல்லை என ஒத்துக் கொண்டது. ஆனாலும் பாதிக்கப்பட்ட சிறுபான்மை சமூகத்துக்கு நீதி வழங்குவதற்குப் பதிலாக ஆக்கிரமிப்பாளர்களிடமே மசூதியை விட்டு விடுங்கள், மசூதியை வேறு இடத்தில் கட்டிக் கொள்ளுங்கள் என ஒரு அநீதியான தீர்ப்பை வழங்கியது. அதற்குப் பிறகு கியான்பாவி மசூதி முதல் சம்பல் மசூதி வரை அனைத்து முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களிலும் இந்துக் கோவில்கள் இருந்ததாக புனைந்து வெறுப்பு அரசியல் தூபம் போட்டு வளர்க்கப்படுகிறது. அப்படி யார் உரிமை கொண்டாடினாலும் அதை எந்த நீதிமன்றமும் விசாரணைக்கோ, அளவீடு செய்யவோ எடுத்துக் கொள்ளக்கூடாது என சமீபத்தில் வரவேற்கத்தக்கதோர் இடைக்கால தடை விதித்திருக்கிறது உச்ச நீதி மன்றம்.

**புல்டோசர் நீதி**

மோடி – யோகி ஆட்சியின் சின்னமாக புல்டோசர் மாறி இருக்கிறது. பிஜேபி ஆட்சிக்கு எதிராக எழுதிவந்த ஒரு பத்திரிகையாளர், 3.4 சதுர மீட்டர் பொது இடத்தை ஆக்கிரமித்து விட்டார் என்று காரணம் கூறி அவரது வீடு முழுவதையும் உத்தரபிரதேச யோகி ஆட்சி புல்டோசர் கொண்டு இடித்துத் தரைமட்டமாக்கி விட்டது. இது சட்டத்துக்கு விரோதமானது. ஒரு வேளை தவறாக இருந்தாலும் முழு வீட்டையும் இடித்து தரைமட்டமாக்கும் உரிமை அரசுக்கு கிடையாது. அது குற்றவாளியை தண்டிக்காமல் எந்த குற்றமும் செய்யாத அந்த குடும்பத்தையே தண்டிப்பதாகும் என உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. இந்தப் புல்டோசர் அநீதி மோடி-யோகி ஆட்சிகளுக்கு எதிராக நாம் தீவிர போராட்டங்கள் கட்டமைக்க வேண்டி இருக்கிறது.

நாடு முழுவதும் சுமார் 18 கோடிக்கும் மேலான விவசாயிகள் கடனில் உழன்று கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் தற்கொலை ஒரு தொடர்கதையாக இருந்து வருகிறது. விவசாய கடன் தொகையிலும், கடன் வாங்கிய விவசாயிகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அந்த கடன்கள் எதையும் தள்ளுபடி செய்ய ஒன்றிய மோடி அரசோ, தமிழக திமுக அரசோ தயாராக இல்லை. அறிவிக்கப்பட்ட தள்ளுபடிகளும் விவசாயிகளை கடன் பொறி யிலிருந்து விடுவிக்கப் போதுமானதாக இல்லை. மாறாக, நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றுகிறது திமுக அரசு. ஆந்திர பிரதேசத்தில் ஜகன் மோகன் ரெட்டியின் ஒய் எஸ் ஆர் சி பி கட்சி கடந்த சட்டமன்றத் தேர்தலில் படுமோசமாக தோற்றதுக்கு இது

போன்றதொரு சட்டத்தை நிறைவேற்றியதும் முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட இதே மாதிரியான சட்டம் ஏற்கனவே பீகாரில் நடைமுறையில் இருக்கிறது. எப்படி ஒரே மாதிரியான சட்டம் எல்லா மாநிலங்களிலும் அமுலாகி வருகிறது எனப் பார்த்தால், ஒன்றிய அரசு ஏற்கனவே தயாரித்து இருக்கும் ஒரு சட்ட முன்மாதிரிதான் அதற்கு காரணம் என தெரிகிறது. அத்துடன் அதை அமுல்படுத்த மறுக்கும் மாநிலங்களுக்கு நிதி தர ஒன்றிய மோடி அரசு மறுக்கிறது. ஒன்றிய மோடி அரசின் அந்தச் சட்ட முன்மாதிரி ஏழை எளியவர்களின், சிறு குறு விவசாயிகளின் நிலங்களை கபடத்தனமாக கைப்பற்ற வழிவகுக்கிறது. அந்த நிலங்களைப் பிடுங்கி கார்ப்பரேட் முதலாளிகள் கையில் கொடுக்கிறது. அது தான் மகாராஷ்ட்ராவில் நில ஒருமுகப்படுத்தல் என்றும் ஆந்திராவில் நில உரிமை வழங்குதல் என்றும் பீகாரில் நில அளவெடுப்பு என்றும் தமிழகத்தில் நில ஒருங்கிணைப்பு என்றும் வெவ்வேறு நாமகரணங்களைக் கொண்டிருக்கிறது. இது தீவிரமாக எதிர்க்கப்பட வேண்டும். சமீபத்தில் பிகாரில் எம் எல் கட்சி நடத்திய நடை பயணங்கள் இதை ஒரு முக்கிய பிரச்சனையாக எழுப்பி உள்ளன. தமிழகத்திலும் இந்த நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை தீவிரமாக எதிர்த்திட வேண்டும். நீர்நிலைகளில் நூறாண்டுகளாக வாழும் மக்களுக்கு பட்டா வழங்க மறுக்கும் அரசாங்கம், நீர்நிலைகளையும் கூட சீரழிக்க இந்தச் சட்டத்தின் மூலம் தயாராகி வருகிறது.

நூறு நாள் வேலைத் திட்டம் ஆறு நாள் வேலைத் திட்டமாக சுருங்கிப் போயிருப்பதை பல மாவட்டங்களில் காண்கிறோம். கிராமப்புரத்தில் இருக்கும் மக்களை நகர்ப்புரங்களை நோக்கி விரட்டுவதை நோக்கமாகக் கொண்டு, பெரு முதலாளிகளுக்கு மலிவான உழைப்பு கிடைத்திட வழிவகை செய்யும் விதத்தில் நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை தயவுதாட்சண்யமின்றி குறைத்து வருகிறார் மோடி. தமிழக திமுக அரசும் அதே வழியைத்தான் கடைப்பிடித்து வருகிறது.

மதுரை அருகே டங்ஸ்டன் கனிம சுரங்கப் பணிகள் ஹிந்துஸ்தான் ஜின்க் என்கிற நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலே சுரங்கப் பணிகளை வழங்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திற்கு அதிமுக எப்போதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. திமுக இதைத் தடுத்து நிறுத்தியே தீருவோம் என்கிறார்களே தவிர எப்படி என திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கவில்லை. பிஜேபி மாநிலத் தலைவர் அண்ணாமலை டெல்லி சென்று அதைத் தடுக்கப் போவதாக தம்பட்டம் அடித்திருக்கிறார். ஆனால், டங்க்ஸ்டன் மட்டுமல்ல, கன்னியாகுமரி தாது மணல் சுரங்கம் உள்ளிட்ட அனைத்து புதிய திட்டங்களும் சாமான்ய மக்களின் வாழ்வாதாரங்களை அபகரிப்பது, விவசாயிகளை நிலத்தை விட்டு விரட்டி அடிப்பது, கார்ப்பரேட் மூலதனத்தின் கைகளில் மொத்த நிலங்களையும் அளிப்பது என்பதாகவே இருக்கின்றன. இதை மோடி தீவிரமாக செய்து வருகிறார். மாநில அளவில் அத்தகையவற்றை செய்வதில் திமுக ஆட்சியும் விதிவிலக்கல்ல என்பதைத் தான் பல நிகழ்வுகளும் நமக்கு உணர்த்தி வருகின்றன. மிகச் சமீபத்திய உதாரணம் சாம்சங் தொழிலாளர் போராட்டத்தில் திமுக அரசு நடந்து கொண்ட விதமும், அதனை கையாண்ட விதமும் ஆகும். அறுதிப் பெரும்பான்மை தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்த சங்கத்திற்கு சங்கப்பதிவு பெறுவதற்கு கூட உயர் நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலைமைதான் கூட்டணி கட்சிகளுக்கே இருக்கின்றன என்பது மிகவும் அவலமான நிலைமை ஆகும். கார்ப்பரேட் ஆதரவு என்றால் அதில் பிஜேபி முதல் திமுக வரை யாரும் விதிவிலக்கல்ல என்பதற்கு இது ஒரு மிகப்பெரும் உதாரணம் ஆகும்.

புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டுக்கு நிதி தர முடியாது என ஒன்றிய மோடி அரசு கொக்கரிக்கிறது. மும்மொழிக் கொள்கை வேண்டாம், இரு மொழிக் கொள்கை வேண்டும் என்பது தாண்டி திமுக அரசுக்கு அதில் பெருத்த முரண்பாடு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக, ஒன்றிய மோடி அரசின் கல்விக் கொள்கையின் அடிப்படையே தனியாருக்கு கல்வியைத் தாரை வார்ப்பதுதான். ஆனால், மாநில கல்விக் கொள்கை உருவாக்குவதாக கூறும் திமுக அரசின் கல்விக் கொள்கையும் தனியாரிடம் கல்வியை வழங்குவதை நிறுத்துவதாகத் தெரியவில்லை. கார்ப்பரேட் முதலாளிகள் ஆதரவு, கல்வி மாபியாக்கள் ஆதரவு, மது மாபியாக்கள் ஆதரவு போன்றவற்றில் இடதுசாரி கட்சிகள் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் பெருத்த முரண்பாடு இருப்பதாக தெரியவில்லை.

ஆர்எஸ்எஸ் – பிஜேபிக்கு எதிராக, அதன் மதவெறி அரசியல், வெறுப்பு அரசியல் போன்றவற்றுக்கு எதிராக, மாநில உரிமை பறிப்புக்கு எதிராக, கூட்டமைப்புவாதத்தை குலைப்பதற்கு எதிராக, திமுக உள்ளிட்ட பல தரப்பட்ட அரசியல் சக்திகளோடு இணைந்து குரல் கொடுப்பது என்பது பிஜேபி அல்லாத கட்சிகளின் மக்கள் விரோத அரசியலை ஆதரிப்பதாக பொருளாகாது. மாறாக, அத்தகைய மக்கள் விரோத அரசியலுக்கு எதிராக குரல் கொடுப்பதிலும் சிபிஐ எம் எல் கட்சி எப்போதுமே முன்னணியில்தான் இருக்கிறது.❒

# தோழர் என்கே பெயரால் உறுதி ஏற்போம்; புரட்சிகர கம்யூனிஸ்ட் அரசியல் கட்சியாக முன்னேறிச் செல்வோம்!

தோழர் என்கே நம்மை விட்டு பிரிந்து இரண்டாண்டுகளாகின்றன. 2022, டிசம்பர் 10 (மனித உரிமை நாள்) அன்று திண்டுக்கல் மாவட்டக் கமிட்டிக் கூட்டத்திலிருந்தபோது, இறந்தார் என்ற செய்தி ஒட்டுமொத்த கட்சியையும் அதிர்ச்சியடைய வைத்தது. எழுபதுகளின் பிற்பாதியில் திண்டுக்கல்லிலிருந்து தொடங்கிய தோழர் என் கே வின் புரட்சிகர பயணம் 2022 ல் திண்டுக்கல்லிலேயே முடிவுக்கு வந்தது. ஆனால், ஏறத்தாழ அவரது அரை நூற்றாண்டுகால கம்யூனிஸ்ட் வாழ்க்கைப் பயணம் நம்மை தொடர்கிறது.

கம்யூனிஸ்ட்களுக்கே உரிய எளியவாழ்க்கை, மக்கள் மீதும் மக்கள் போராட்டங்கள் மீதும் மாறாத நம்பிக்கை, மிகக் கடினமான சூழலிலும் தளராத முன்முயற்சி, கட்சி முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் அசைக்க முடியாத உறுதி இவைதான் தோழர் என் கே வின் அடையாளம்.

2020 ல் அவர் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆனதற்கு முன்பு புரட்சிகர தொழிற்சங்க மய்யமான ஏஅய்சிசிடியு வின் மாநிலத் தலைவர்களுள் ஒருவராக கணிசமான காலம் பணிபுரிந்தார். கொடூரமான சுரண்டலாலும் ஒடுக்குமுறையாலும் சிதறடிக்கப்பட்ட நாமக்கல் விசைத்தறி தொழிலாளரை அணிதிரட்டி போராடச் செய்ததில் முக்கியப் பங்கு வகித்தார். எவ்வித பாசாங்கும் பகட்டுமின்றி தொழிலாளரோடு தொழிலாளியாக பழகி தொழிலாளரை வழிநடத்தினார். தலைவராக உயர்ந்தார்.

பிரிக்கால் தொழிலாளர் சங்கம் மூலம் மீண்டும் கோவை தொழிலாளர் வர்க்கம் மத்தியில் கால்பதித்த ஏஅய்சிசிடியு, பிரிக்கால் தொழிலாளரை பல வீரமிக்க போராட்டங்களில் வழிநடத்தியது. பிரிக்கால் தொழிலாளர் தமிழக தொழிற்சங்க இயக்கத்தில் பல முன்னுதாரணங்களை படைத்தனர். பிரிக்கால் பெரு நிறுவனம் "நக்சல்" பூச்சாண்டி காட்டி காவல்துறை, நீதித்துறை உதவியுடன் தொழிற்சங்கத்தையும் தொழிலாளர் தலை வர்களையும் வேட்டையாடி சுடுகாட்டு அமைதியை ஏற்படுத்த கடுமையாக முயற்சித்தது. தொழிலாளரும் ஏஅய்சிசிடியுவும் போராட்டத்தைக் கைவிட மறுத்தனர். தலைவிரித்தாடும் ஒடுக்குமுறைக்கு மத்தியிலும் சற்றும் நிலைகுலையாது தோழர் என் கே, மறைந்த தோழர் ஸ்வப்பன் முகர்ஜியுடன் கரம் கோர்த்து தொழிலாளரை வழிநடத்தினார். ஒடுக்குமுறை, சுற்றிவளைப்பை உடைத்து தொழிலாளரை, வெகுமக்களை போராட்டத்தில் முன்னேறச் செய்வது இகக(மாலெ)-ஏஅய்சிசிடியூவின் புரட்சிகர போராட்ட மரபு. அந்த மரபின் அடையாளமாக களத்தில் நின்றார் தோழர் என் கே. அந்த மரபின் தொடர்ச்சியாக, 10 ஆண்டுகளாக சிறையிலிருக்கும் தோழர்கள் ராமமூர்த்தி, மணிவண்ணன் விடுதலை இயக்கத்தை நடத்தியாக வேண்டும். ஏஅய்சிசிடியூ 11வது அகில இந்திய மாநாடு நடைபெறும் பின்னணியில் இந்த இயக்கத்தை தமிழக தொழிலாளர் வர்க்க இயக்கமாக, முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் துணையோடு ஒரு ஜனநாயக இயக்கமாக நடத்திட உறுதி ஏற்க வேண்டும்.

அசாதாரணமான ஒரு சூழ்நிலையில் மாநிலச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தோழர் என்கே, ஒரு அசாத்தியமான முயற்சியுடன் கட்சி மத்தியக்கமிட்டி வழிகாட்டுதலை உணர்வுபூர்வமாக ஏற்று கட்சியை முன்னோக்கிய தடத்தில் வழி நடத்தினார். புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கு எப்போதும் தங்கு தடையின்றி சீறிச் செல்லும் நெடுஞ்சாலை கிடையாது. உள்ளும் புறமும் சவாலான சூறாவளிக்கு மத்தியிலேயே பயணம் செய்தாக வேண்டும். அந்தப் பணியை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் மத்தியக்கமிட்டி உறுப்பினர் என்ற வகையிலும் செய்து காட்டினார். தமிழ்நாட்டின் சங்கிகளை எரிச்சலூட்டிய தஞ்சை பாசிச எதிர்ப்பு மாநாட்டை இடது, ஜனநாயக சக்திகளின் பங்கேற்புடன் வெற்றிகரமாக வழி நடத்தினார்.

கட்சியின் பீகார் தேர்தல் வெற்றியை தொடர்ந்து, இகக(மாலெ) வை ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் அரசியல் சக்தியாக கண்ட தமிழ்நாட்டிலுள்ள இடது சக்திகள் வரிசை

வரிசையாக இகக(மாலெ) வை நோக்கி ஈர்க்கப்பட்டனர். அவர்களைகட்சிக்குள்கொண்டு வருவதிலும் கட்சிக்குள் உறுதிப்படுத்துவதிலும் அளப்பரிய ஆர்வத்துடன் செயல்பட்டது என்றென்றும் நினைவு கூரத்தக்கது.

நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க ஆணவக் கொலைகள், தீண்டாமை ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, விவசாயத்தில் இரும்புப்பிடியாக உள்ள கார்ப்பரேட்- குலக் ஆதிக்கத்துக்கு எதிராக விவசாய தொழிலாளர், ஏழை விவசாயிகள் உள்ளிட்ட நாட்டுப்புர விவசாய வர்க்கத்தை அணிதிரட்ட உறுதியுடன் பாடுபட்டார். அதே சமயம் அவர்கள் சீர்திருத்த சிறைக்குள் அடைபட்டுப்போகாமல், புரட்சிகர வெகுமக்கள் இயக்கத்தின் அடித்தளமாக மாற்றும் தீவிர முயற்சியுடன் தமிழக கிராமங்களில் பயணம் செய்தார். அதுபோலவே பெண்கள், சுதந்திரமான வெகுமக்கள் அரசியல் இயக்கத்தில் அணிதிரள வேண்டுமென ஊக்கப்படுத்தினார். மனுநீதி சங்கிலிகளை உடைத்து நொறுக்கும் முற்போக்கு பெண்கள் இயக்கத்தை வளர்ப்பதற்கும் பெண் முன்னோடிகளை அடையாளப் படுத்துவதிலும் அவர்களது முன்முயற்சிக்கு ஊக்கமளிப்பதிலும் கவனம் செலுத்தினார்.

தமிழ்நாட்டின் நீண்டகால திராவிட அரசியல், பாசிச சக்திகளிடமிருந்து கடும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. பாசிச அச்சுறுத்தல்களுக்கு எதிராக, பெரியார் மரபுகளால் அறியப்படும் முற்போக்கு விழுமியங்களை உயர்த்திப்பிடிக்கிற அதேசமயத்தில் அதை காலத்தின் தேவைக்கேற்ப மறுவீரியம் கொள்ளச் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தும் கட்சியின் நிலைப்பாட்டை மாணவர், இளைஞர் சமூகம் முன்னெடுத்துச் செல்லவேண்டுமென விரும்பினார். இதற்காக, சமூக மாற்றத் துடிப்பும் வெகுமக்கள் முன்முயற்சியும் கொண்ட மாணவர், இளைஞர் அமைப்புகளை உருவாக்க பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். தமிழ்தேசியம், திராவிட தேசியம்; தேசியம், தெய்வீகம் பேசி இளம் தலைமுறையை வசீகரிக்க முயற்சிக்கும் சக்திகளிடமிருந்து இளைஞர், மாணவர்களை வென்றெடுக்க தீவிரமாக பாடுபட்டாக வேண்டும். தோழர் என் கே வின் விருப்பத்தை இயக்கமாக்கிட வேண்டும்.

அனைத்துக்கும் மேலாக அவர், கட்சி அடித்தளத்தை விரிவுபடுத்த, வலுப்படுத்த இடைவிடாது வலியுறுத்தி வந்தார், முயற்சி மேற்கொண்டார். விரிவான கட்சி உறுப்பினர் எண்ணிக்கையும், கட்சிக் கிளைகள் முதல் மாவட்ட, மாநிலக் கமிட்டிகள் வரை முன்முயற்சியும் உறுதிப்பாடும் கொண்டதாக இருக்கும் கட்சி அமைப்புக்காக, கட்சி மறுசீரமைப்பு இயக்கத்தை முன்னெடுப்பதில் கவனம் செலுத்தினார்.

இந்தப்பணிகளின் முத்தாய்ப்பாக கட்சியின் பதினோராவது மாநில மாநாட்டை திருச்சியில் வெற்றிகரமாக நடத்திக் காட்டி தலைமைப் பங்காற்றினார். ஒட்டுமொத்த கட்சியின் ஜனநாயக விருப்பத்தின்படி மாநிலச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் பதினோராவது காங்கிரசில் பங்குபெறும் பேரார்வத்துடன் தயாராகிக் கொண்டிருந்தார். ஆனால், கட்சிக் காங்கிரசில் அவரது உருவப்படத்தைதான் நம்மால் பார்க்க முடிந்தது. மற்ற புரட்சியாளர்களைப் போலவே கட்சிப்பணிக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட என்.கே, தனது உடல்நிலைப்பற்றி தேவையான அக்கறையை காட்டாமல் ஓடிக்கொண்டே இருந்தார்.

மாநிலக்கமிட்டி வழிகாட்டுதலின்படி, அவர் மறைந்த நாளான டிசம்பர் 10 அன்று, மாநிலம் முழுவதுமுள்ள கட்சிக்கிளைகள் தோறும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. கட்சிக் கிளைகளை செயலூக்கப்படுத்துவது, கட்சிக்கு புதிய உறுப்பினர்களை சேர்ப்பது, மக்களுடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டுவர மக்களை நோக்கி ஆதார கட்சி அமைப்புகளை உந்திச் செலுத்துவது, கட்சி ஏடு தீப்பொறியை விரிவாக பரப்பும் நோக்கோடு அதிக எண்ணிக்கையில் சந்தா சேர்ப்பது என்ற கடமைகளை நிறைவேற்ற உறுதி ஏற்கப்பட்டது. தோழர் வி எம் மின் 26 வது ஆண்டு உறுதி ஏற்பு நாளில் இந்தக் கடமைகளை நிறைவேற்ற மறுஉறுதி ஏற்கப்பட்டது.

தோழர்என்கேவின்வாழ்வையும்பணியையும் நினைவுகூரும் அரசியல் நிகழ்ச்சியாக, திண்டுக்கல் எரியோட்டில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றுள்ளது. அவரது வாழ்வும் பணியும் ஒட்டுமொத்த கட்சிக்கு உத்வேகம் அளிப்பதாக, பல மடங்கு உறுதிப்பாட்டை அளிப்பதாக இருக்கும். துடிப்பும் வீரியமும் கொண்ட வெகுமக்கள் அமைப்புகள், அரசியல் முன்முயற்சியும் உறுதிப்பாடும் கொண்ட வலுவான கட்சி என்ற தோழர் என் கேவின் பெருவிருப்பத்தை நிறைவேற்ற நாம் நம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொள்வோம்! புரட்சிகர கம்யூனிஸ்ட் அரசியல் கட்சியாக முன்னேறிச் செல்வோம்!

**மாநிலக்கமிட்டி;**

**இகக(மாலெ)விடுதலை**

**–தமிழ்நாடு**

# ஆந்திராவில் மக்கள் உரிமை மாநாடு



டிசம்பர் 4ல், விஜயவாடாவில் மக்கள் உரிமை மாநாடு நடைபெற்றது. சிபிஐ(எம்எல்) நடத்திய இம்மாநாட்டில், கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஸ்வதேஷ், கட்சியின் ஆந்திரா பொறுப்பாளர் வீ. சங்கர், தெலுங்கானா பொறுப்பாளர் மூர்த்தி, மத்திய கமிட்டி உறுப்பினர் நாகமணி ஆகியோர் உரையாற்றினர். மாநிலச் செயலாளர் பங்கார் ராவ் மாநாட்டுக்கு தலைமை தாங்கினார்.

“சூப்பர் ஆறு போதுமா? மக்கள் கோரிக்கை ஆறு தேவை!”

“மாநிலத்தின் உண்மையான எதிர்க்கட்சியாக மக்கள் இயக்கங்களைக் கட்டி எழுப்புவோம்!”

“காவி பாசிசத்திற்கு எதிராக செம்பதாகையை உயர்த்திப் பிடிப்போம்!”

எனும் முழக்கங்களை மையமாகக் கொண்டு மக்கள் உரிமை மாநாடு நடைபெற்றது.

ஆந்திர கார்ப்பரேட்டுகளின் நண்பர், அரசு சலுகைசார் முதலாளித்துவம் மீண்டுமொருமுறை மூர்க்கத்தனமாக திரும்பி வந்திருக்கிறது. அரசு சலுகை சார் முதலாளித்துவ சக்திகளின் கை மீண்டும் மேலோங்கி இருக்கிறது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி இரண்டுமே ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பிஜேபி அரசையும் அதன் அரசியலையும் ஆதரித்த ஒரே மாநிலம் ஆந்திராதான். அத்தகைய நிலைப்பாட்டுக்கு பெருத்த விலையாக ஜகன் தனது ஆட்சி பீடத்தையே பலி கொடுக்க வேண்டியதாகி விட்டது. வலுவான ஒரு எதிர்க் கட்சி இல்லாததோர் அரசியல் சூழலில் தெலுங்கு தேசம், ஜன சேனா போன்ற கட்சிகளை ஆதரிக்கும் அவசியம் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்டு விட்டது. சந்திரபாபு நாயுடு முஸ்லீம்களுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடு அறிவித்தது ஒரு முக்கியமான செயல்தந்திரமாக பார்க்கப்படுகிறது. மத அடிப்படையிலான இட ஒதுக்கீடு, பிஜேபிக்கு ஒவ்வாதது என்றாலும் தனி தேர்தல் அறிக்கை வெளியிடுவதை பிஜேபி தவிர்த்தது.

வேலையின்மை, வறுமை, நில உரிமைச் சட்டம் மூலம் கடும்பாடு பட்டு பெற்ற நிலத்தை இழந்து விடுவோம் என்ற பயம், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் அமைப்புகளின் குரல்வளையை நசுக்கும் அதிகாரத்துவம் ஆகியவற்றின் முன்னால் ஜெகனின் ஒய்எஸ்ஆர்சிபியின் நலத் திட்ட கவர்ச்சிவாதம் தோற்றுப் போனது. சந்திரபாபு நாயுடுவைக் கைது செய்ததை ஒரு மலிவான அரசியல் என பலரும் கருதினர். உள்கட்டுமானம், மூலதனம், வேலை வாய்ப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்கான தேடுதல் என்பது ஜெகனின் சேமநல வாதத்தை வெற்றி கொண்டுவிட்டது என ஊடகங்கள் சித்தரிக்கின்றன. மாறாக, முதியவர்களுக்கு ரூ 4000 பென்சன், ரூ 3000 வேலையில்லா நிவாரணம், ரூ 15000 விவசாயிகள் உதவி, ரூ 1500 பெண் மாணவர் உதவி, பெண்களுக்கு இலவச பஸ், இலவச எரிவாயு உருளைகள் என தேசிய ஜனநாயக கூட்டணி முன்வைத்த சூப்பர் ஆறு உத்தரவாதங்கள் மக்களைக் கவர்ந்தன. முஸ்லீம்களுக்கு 4 சதவீத இட ஒதுக்கீடு என்கிற மாபெரும் செயல் தந்திரம் சிறுபான்மை வாக்குகளைப் பெற உதவியது. அது பெரும் மாற்றத்திற்கு வழி வகுத்தது.

தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி பிற்போக்கு சக்திகளின் வெற்றியாகும். ஏனென்றால் அது தலித்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் இதர ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு எதிராக ராஜு-கம்மா-காப்பு போன்ற ஆதிக்க சமூக சக்திகளைக் கொண்ட கூட்டணியின் அரசியல் அறுதியிடலைக் குறிப்பதாகும்.

பென்சன் ரூ 1000 அதிகரித்திருப்பதைத் தவிர வேறு எந்த வாக்குறுதிகளும் இன்று வரையிலும் நிறைவேற்றப்படவில்லை.



வேலையின்மை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். நூறு நாள் வேலை திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 200 நாள் வேலை, நாளுக்கு ரூ 600 கூலி வழங்கப்பட வேண்டும், நூறு நாள் வேலையை நகர்ப்புறத்திற்கு நீட்டிக்க வேண்டும், ரூ 35000 குறைந்தபட்ச ஊதியம், இலவச கல்வி, சுகாதாரம் வழங்கப்பட வேண்டும் என சிபிஐ எம் எல் கோருகிறது. அமராவதியை சிங்கப்பூராக்குவது பற்றி, கடல் விமானங்கள் பறக்க விடுவது பற்றி மட்டுமே சந்திரபாபு நாயுடு கவலைப் படுகிறாரே தவிர மக்கள் கோரிக்கை ஆறு பற்றி கொஞ்சமும் கவலைப் படுவதில்லை. மிகவும் பிந்தங்கிய, வறுமை பீடித்துக் கிடக்கும் ராயலசீமா பகுதிகளை, வட ஆந்திரப் பகுதிகளை முன்னேற்றுவது குறித்து சற்றும் சிந்திப்பதில்லை. எனவே தான், மக்கள் கோரிக்கை ஆறு நிறைவேற்றப்பட வேண்டும் என்கிறது சிபிஐ எம் எல்.

ஆந்திர மாநிலத்தின் மதச் சார்பற்ற மரபை சிதைக்கக் கூடிய, ஆந்திராவில் வளர்ந்து வரும் கார்ப்பரேட், மதவெறி பாசிச சக்திகளை முறியடித்தே தீர வேண்டுமென சிபிஐ எம் எல் உறுதி பூண்டுள்ளது. ஆந்திராவில் பிஜேபி வேரூன்றுவதைத் தடுத்திட தன்னாலான அனைத்தையும் செய்திட சிபிஐ எம் எல் உறுதி பூண்டுள்ளது. சந்திரபாபு நாயுடு மொத்த மாநிலத்தையும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு விலை கூவி விற்பது மட்டுமல்ல, ஆர் எஸ் எஸ் – பிஜேபியை தனது தோள்களின் மீது சுமந்து, மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் படரச் செய்கிறார். பவன் கல்யாண் தனது சொந்த கட்சி ஜன சேனாவை விட பிஜேபிக்கு, அதன் பிற்போக்கு வெறுப்பு அரசியலுக்கு மிகவும் விசுவாசமாக இருக்கிறார். ஆந்திர மண்ணில் சனாதன தர்மத்தை காப்பாற்றும் ஆர் எஸ் எஸ் நிகழ்ச்சி நிரலை தனது தோள்களின் மீதே சுமந்து கொண்டிருக்கிறார்.

ஜெகனும் கூட அதே ஆளும் வர்க்கத்தைதான் பிரதிநிதித்துவப் படுத்தினார் என்றாலும், அதன் மிகவும் பிற்போக்கான ஆதிக்க சாதிகளையும், பகல் கொள்ளையில் வாழ்ந்து வந்த சலுகைசார் லும்பன் முதலாளிகளையும் பிரதிநிதித்துவப்படுத்து பவராகவும் இருந்தார். ரெட்டி ஆதிக்கம் மங்கிப் போய், சலுகைசார் முதலாளித்துவ சக்திகளும் ஆதிக்க நடுச் சாதிகளும் தற்போது அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கின்றன.

தீவிர இடதுசாரி அரசியலுக்கும் முற்போக்கு அரசியலுக்கும் பெயர் பெற்ற அந்த ஆந்திரா பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றியை மத வெறி அரசியலின் வெற்றி என குறிப்பிட முடியாவிட்டாலும், வலதுசாரி சக்திகள்தான் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை காணத் தவறக் கூடாது.

துரதிருஷ்டவசமாக, எதிர்க்கட்சி முகாமைச் சார்ந்த இடதுசாரிகளும் காங்கிரசும் ஓரஞ்சாரத்திற்குத் தள்ளப்பட்டு விட்டனர். தேர்தல் செயல்பாடு அடிப்படையில் மிகமிக சின்னஞ்சிறு சக்தியாகிப் போய் விட்டார்கள். காங்கிரசின் சமூக அடித்தளம் சிதறுண்டு போய் விட்டது. இடதுசாரிகள் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

இத்தகைய பின்னணியில், மாநில அரசியலில் முற்போக்கு, ஜனநாயக, இடதுசாரி அரசியல் மீட்சியைப் பற்றி கற்பனை செய்வதற்குக் கூட தலித்துக்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோரின் அரசியல் அறுதியிடல் மிகமிக அவசியமானதாகிறது. இந்தச் சவாலை கட்சி ஏற்றுக் கொள்கிறது. கார்ப்பரேட், மதவெறி பாசிச சக்திகளை ஆந்திர மண்ணிலிருந்து அகற்றிட சூளுரைக்கிறது. ❐

# டங்ஸ்டன் சுரங்கம்: மக்கள் போராட்டத்துக்கு வெற்றி! திமுக அரசை பின்வாங்கச் செய்த போராட்டங்கள்!



வேதாந்தா நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமித்த தீர்மானத்தை நிறை வேற்றியுள்ளது. பாஜகவின் அண்ணாமலை, சுரங்கத் திட்டம் கைவிடப்படும் என்று ஒன்றிய அரசு சொல்வது போன்ற செய்திகளை பரப்பி வருகிறார். இப்படியாக, அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்க விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அரிட்டாபட்டி மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் என்று உறுதியாக உள்ளனர்.

**டங்ஸ்டன் சுரங்கத்தைக் கொண்டு வருவது தான் இந்திய அரசு; முதலாளிகளின் உறுதியான முடிவு:**

மாலிப்டினம், டங்ஸ்டன் மூலகங்களை எடுப்பதற்கு ஸ்டாலின் அரசின் இயற்கை வள ஆதாரத்துறை எடுத்த நிர்வாக முயற்சிகளும், ஒன்றிய மோடி அரசின் நடவடிக்கைகளும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல. ஏனென்றால், மின்னாற்றல் உற்பத்தி, சாதனங்களை உருவாக்குவது- இதுதான் இந்தியா முதலாளிகளின் இலக்கு. அதற்கு உதவியாக இருப்பது இந்திய அரசின் எதிர்காலத் திட்டம்.

பருவநிலை மாற்றம் கதவைத் தட்டுவதும், அதனால் ஏற்படும் புயல், வெள்ளம், உயிரிழப்பு உள்ளிட்ட பிரச்சனைகளும் மக்களின் விழிப்புணர்வை வலுப்படுத்தி வருகின்றன. கார்பன் சார்ந்த (பெட்ரோல் போன்ற நிலத்தடி) எரிபொருட்களைக் கைவிட்டு, கார்பன் உமிழ்வைக் குறைக்கும் தொழில் நுட்பங்களை நோக்கி உலகம் முன்னேறி வருகிறது. தற்போது நாம் காணும் மின்சார வாகனம் ஓர் உதாரணம். எந்த வகையிலும் கார்பன் உமிழ்வை மின்சார வாகனம் குறைக்காது என்றாலும், மக்களின் விழிப்புணர்வைக் காசாக்கிக் கொள்ளவும், அரசு தரும் மான்யங்களின் வழி வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளவும் வாகன உற்பத்தியாளர்களுக்கு வாய்ப்பிருக்கிறது.

எதிர்காலத்தில், பெட்ரோல்- நிலக்கரி அல்லாத ஆற்றல் (ஹைட்ரஜன், சூரிய சக்தி, காற்று சக்தி, அலை சக்தி) மூலங்களுக்கும், அவற்றுக்கான சாதனங்கள், மின் கலங்களுக்கும் (பேட்டரிகள்) பெரிய சந்தை உருவாகும். அச்சந்தையைக் கைப்பற்ற உலக உற்பத்தியாளர்கள் முன்னேறி வருகிறார்கள். அந்த முதலாளித்துவ முயற்சிகளில் பங்கேற்க இந்திய முதலாளிகள் போடும் திட்டமே டங்ஸ்டன், மாலிப்டினம் தோண்டுவதற்கு ஒன்றிய அரசும் மாநில அரசும் எடுத்த முன்கூட்டிய நடவடிக்கைகள்.

இப்பிரச்சனை 2019க்கு முன்பு துவங்கியது. 2023 செப்டம்பரில் ஒன்றிய மோடி அரசு தனது அரசிதழில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அறிவிப்பு வெளியிடப்பட்ட 45 நாட்களுக்குள் மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தில் உள்ள சுரங்கம் தோண்டக் கூடிய பகுதிகள் பற்றி தகவல் அளிக்க வேண்டுமென்றது. சற்றும் தயங்காத தமிழ்நாடு மாநில அரசின் இயற்கைவள ஆதாரங்கள் துறை, அக்டோபர் 2023ல் மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கவும் தர்மபுரி/கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மாலிப்டினம் (*Molybdenum*) சுரங்கம் அமைக்கவும் வேண்டுகோள்

விடுத்ததை 23 டிசம்பர் 2023 தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக் காட்டி எழுதியுள்ளது.

**எதிர்காலத்துக்கான மூலகங்களைத் தோண்ட சட்டத்தையே திருத்திய ஒன்றிய மோடி அரசு!**

ஒன்றிய பாஜக ஆட்சி, 2015ல் சுரங்கங்கள் & உலோகங்கள் (வளர்ச்சியும் கட்டுப்படுத்துதலும்) சட்டம் 1957யைத் திருத்தியது. அதன்பின் 2021 வரை மூன்று திருத்தங்கள் செய்யப்பட்டன. இவையெல்லாம் போதாது என்று ராணுவத்திற்கும் எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அவசியமான உலோகங்களைத் தோண்டி எடுக்க 2023ல் மறுபடியும் திருத்தம் செய்தது.

கிரிட்டிக்கல் மினரல் (முக்கியமான தாதுக்கள்) என்ற பட்டியலில் லித்தியம், கிராபைட், கோபால்ட், டைட்டானியம், டங்ஸ்டன், மாலிப்டினம் உள்ளிட்ட உலோகங்கள் வருகின்றன. ஆற்றல் உற்பத்தி முறையை மாற்றிக் கொள்வதற்கும் 2070க்குள் கரிம வாயு உமிழ்வை பூஜ்யம் என்றாக்கவும் இந்த உலோகங்கள் தேவை என்பதற்காக தொடர்ச்சியான சட்ட திருத்தங்களை பாஜக அரசு செய்தது.

மாநிலங்களின் கட்டுப்பாட்டை உடைத்து ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உலோகங்களை ஏலம் விடுவது, ஏல விதிகளைத் திருத்தி தனது விருப்பத்திற்குரிய தனியார் கம்பெனிகளுக்கு ஏலம் விடுவது போன்ற காரியங்களை பாஜக அரசு செய்துள்ளது.

இவையெல்லாம் இந்திய பெருமுதலாளித்துவத்தின் நலனை மனதில் கொண்டு ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள திருத்தங்களாகும்.

மாலிப்டினம் எதிர்கால ஆற்றல் மூலாதாரமான ஹைட்ரஜன் உற்பத்தியோடு தொடர்புடையது. டங்ஸ்டன் மின் கலங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தில் மிக முன்னேறிய வடிவம்; எதிர்காலத்தின் தேவையாக உள்ளது. லித்தியம் -டங்ஸ்டன் ஆக்சைடு மின்கலங்கள் (lithium-tungsten oxide batteries) கூடுதல் மின் சேமிப்பு, நிலைத்தன்மை கொண்டவை. (இது பற்றி மாற்றுக் கருத்துகளும் உள்ளன.) இவற்றின் காரணமாகவே, தமிழ்நாடு அரசின் இயற்கை வள ஆதாரத்துறை 2023லேயே மேற்கண்ட இரண்டு தாதுப்பொருள் சுரங்கத்துக்கு ஒன்றிய அரசு அனுமதி அளிக்க வேண்டும் எனக் கோரியிருந்தது.

நவம்பர் 30, 2024 அன்று தமிழ்நாடு அரசின் இயற்கை வள ஆதாரத்துறை அமைச்சர் துரைமுருகன் ஒன்றிய அரசும், எதிர்க்கட்சிகளும் திமுகவுக்கு எதிராக "டங்ஸ்டனுக்கு ஒப்புதல் தந்துவிட்டதாக" தவறான செய்திகளைப் பரப்புவதாகச் சாடினார். அரசின் நிர்வாக அதிகாரிகள் முதலாளிகளின் நலனை காப்பதற்கு தயக்கமின்றி நடவடிக்கை எடுத்திருக்க, அரசியல் நிர்வாகியான அமைச்சர் எதிர்ப்பது உடனடி அரசியல் காரணங்களால்தான்.

**பாஜக–திமுகவின் நாடக அரசியல்:**

பாஜக தலைவர் அண்ணாமலை 'மக்களைப் பாதிக்கும் எந்த விஷயத்தையும் மத்திய அரசு செய்யாது என்பதால் இப்பிரச்சனை தொடர்பாக ஒன்றிய சுரங்கம் - நிலக்கரி அமைச்சர் கிஷன் ரெட்டியைச் சந்தித்துப் பேசி... திட்டத்தை கைவிடுவது குறித்து பரிசீலனை செய்யக் கோரியுள்ளதாகவும் அமைச்சர் பரிசீலனை செய்வதாக அவர் ஒப்புக் கொண்டதாகவும்' சொல்லியுள்ளார். மக்களை நலனைக் கருத்தில்கொண்டு நல்ல முடிவு எடுக்கப்படும்', டங்ஸ்டன் வராது என்று நாடகம் போடுகிறார்.

அரசு என்ற முறையில் டங்ஸ்டனுக்கும் மாலிப்டினத்துக்கும் நல்வரவு சொன்னதை மூடிமறைக்கும் திமுக அமைச்சர் துரை முருகன், எதிர்கட்சிகள் சதி என்று தங்களின் முந்தைய அரசுத்துறை நடவடிக்கையை மறைக்கிறார். இறுதியாக, 'நான் முதல்வராக இருக்கும்வரை டங்ஸ்டன் வராது' என்று எச்சரிக்கையாக சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின். இரண்டு கட்சிகளுமே 2026 தமிழ்நாடு தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு நாடகம் ஆடுகிறார்கள்.

**வேதாந்தாவின் புதிய வருகை:**

வேதாந்தாவின் துணை நிறுவனமான இந்துஸ்தான் ஜின்க் என்ற கம்பெனி, 24 அக்டோபர் 2024ல் நடைபெற்ற டங்ஸ்டன் சுரங்கத்தை கைப்பற்றும் இரண்டாவது ஏலத்தில் கலந்துகொண்ட ஒரே நிறுவனம்! ஒரே நிறுவனம் கலந்து கொண்டால் கூட ஏலத்தை நடத்தி முடிக்கலாம் என்று ஒன்றிய அரசு செப்டம்பர் 2023ல் விதிகளைத் திருத்தியுள்ளது.

டங்ஸ்டன் விற்ற பணத்தில் 4 சதத்தை இந்திய அரசுக்கு அளிப்பதாகச் சொன்ன வேதாந்தாவின் ஜின்க் நிறுவனம், இரண்டாவது கட்ட ஏலத்தில் 6.05% அளிப்பதாகச் சொல்லி டங்ஸ்டனைத் தட்டிச் சென்றது. ஒரு கிலோ டங்ஸ்டனின் விலை 2500 அமெரிக்க டாலர்கள் ஆகும். அப்படியென்றால், வேதாந்தா அள்ளப் போகும் பணத்தின் மதிப்பை கணக்கிட்டு பாருங்கள்.

**குற்றமிழைத்த முதலாளிகள் தப்பிக்கும் கதை:**

ஒன்றிய, மாநில அரசுகள் முதலாளிகளைப் பாசத்துடனும் மக்களைத் தேர்தல் கண்ணோட்டத்துடனும் அணுகுகின்றன. “வளர்ச்சியை முதலாளிகள்தான் கொண்டு வருகிறார்கள்” என்று நிர்மலா சீத்தாராமன் மூடத்தனமாக கூறுவதை திமுகவும் நம்புகிறது; அமுலாக்குகிறது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஏற்படுத்திய மாசுபாடு மக்களைப் போராடத் தூண்டியது. தமிழ்நாடு அரசின் வருவாய்துறையும் காவல்துறையும் சேர்ந்துகொண்டு போராடிய மக்களை வேட்டையாடின. அப்போதிருந்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி “துப்பாக்கிச் சூடு பற்றி தொலைக்காட்சி பார்த்துதான் தெரிந்துகொண்டேன்”, என்றார். அதிகாரிகளே களத்தில் இறங்கி போராடிய மக்களில் 13 பேரைச் சதிகார- கொடூரத்துடன் சுட்டுக் கொன்றனர். ஆட்சியர் உள்ளிட்ட வருவாய் அதிகாரிகள் மீதும், காவல்துறை தலைவர் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் மீதும் கொலைக்கான குற்ற விசாரணையும், துறைவாரியான விசாரணையும் நடத்த வேண்டும் என்று நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம் பரிந்துரைத்திருந்தது. ஆனால், அதிகாரிகள் மீது கொலைக் குற்ற விசாரணைக்கு தமிழ்நாடு அரசு உத்தரவிடவில்லை. வெறும் துறைவாரியான விசாரணைதான் நடந்து கொண்டிருக்கிறது. இப்படியாக, காவல்துறையைப் பயன்படுத்தி கொலை செய்தது யார் என்ற கேள்விக்கான பதில் மறைக்கப்பட்டுள்ளது.

வேதாந்தா கொட்டிய நச்சுப் பொருட்களை அகற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் தமிழ்நாடு அரசு எடுக்கவில்லை. மாசுபடுத்தியவரே மாசுபாட்டை அகற்றும் செலவையும் ஏற்க வேண்டும் என்ற சட்ட கோட்பாட்டை ஸ்டெர்லைட் தொடர்பான தீர்ப்பில் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. ஆனபோதும் வேதாந்தாவின் சொத்துகளை ஏலம்விட்டு மாசுபாடு அகற்றும் சட்டப்படியான வேலையை தமிழக அரசு செய்யவில்லை. அனில் அகர்வாலைக் காப்பாற்றிய தமிழ்நாடு அரசு அனைத்து முதலாளிகளும் அவர்தம் குற்றங்களும் விசாரணைக்கு அப்பாற்பட்டவை என்று உலகத்துக்குச் சொல்கிறது. அது மூலதனத்தின் வருகைக்குத் தேவையெனக் கருதுகிறது.

**பாஜக; அதிமுக; திமுக நடத்தும் நாடகங்கள்:**

மதுரை அரிட்டாப்பட்டி மக்கள் டங்ஸ்ட னுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில்,



டங்ஸ்டன் சுரங்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று சிறப்புத் தீர்மானம் இயற்றிய தமிழ்நாடு அரசு மாலிப்டினத்திற்கு (Molyb-denum) தர்மபுரி/ கிருஷ்ணகிரியில் எதிர்ப்பு இல்லாததால் அப்பிரச்சனை பற்றி அமைதி காக்கிறது.

ஏலத்தை எதிர்ப்பதாகச் சொல்லும் திமுகவும் அஇஅதிமுகவும் அரிய வகை மூலகங்களை முதலாளிகள் கொள்ளைய டிப்பதற்காக பாஜக கொண்டுவந்த சட்டத் திருத்தங்களை எதிர்க்காதது ஏன்?

அரசு அதிகாரிகள் டங்ஸ்டன் ஏலம் கேட்டு ஒன்றிய அரசுக்கு எழுதியதை அந்த துறையின் அமைச்சரான துரைமுருகன் மறைப்பது ஏன்?

நான் முதலமைச்சராக இருக்கும்வரை டங்ஸ்டன் வராது என்று சத்தியம் செய்யும் ஸ்டாலின், வேதாந்தா முதலாளி நடத்திய படுகொலைகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையை அமலாக்காதது ஏன்?

**நாடகங்களைக் கடந்துபோவது அவசியம்:**

கிரனைடு சுரங்கத்துக்கு எதிராக அரிட்டாபட்டி மக்கள் நடத்திய போராட்டம் கம்பெனிகளின் சூறையாடலுக்கு எதிரான மக்களின் போராட்ட ஆற்றலை வளர்த்தெடுத்துள்ளது. மக்களின் நலனுக்கான தமிழ்நாடு நமக்கு வேண்டும். பருவநிலை மாற்றத்தை உண்மையில் எதிர்க்கும் இந்தியா நமக்கு வேண்டும். அதனைச் சாதிக்க பாஜக-திமுகவின் நாடக அரசியலை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். அரிட்டாபட்டி மக்களின் தொடர் போராட்ட போர்க்குரலுக்கு ஆதரவாக தமிழகமெங்கும் குரல்கள் ஒலிக்க வேண்டும்.

**–சி. மதிவாணன்**

**நேர்காணல்**

# டாஸ்மாக் மூடப்படும் வரை போராட்டம் தொடரும்!

**வேலூர் பேருந்து நிலையங்களுக்கு அருகிலுள்ள டாஸ்மாக் கடைகளை அப்புறப்படுத்த வேண்டுமென போராடியதற்காக 19–11–'24 முதல் 28–11–'24 வரை 10 நாட்கள் சிறை வைக்கப்பட்டு விடுதலையான; இகக(மாலெ) வேலூர் மாவட்டச் செயலாளர்; அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாநிலக்குழு உறுப்பினர் தோழர் சரோஜாவுடன் ஒரு உரையாடல். தீப்பொறி சார்பாக வாழ்த்துக்களுடன் துவங்கிய உரையாடலில் இருந்து சில பகுதிகள்.**

வாழ்த்துகளுக்கு நன்றி; மகிழ்ச்சி! பழைய, புதிய பேருந்து நிலையங்களுக்கு அருகில் போக்குவரத்துக்கு இடையூறாக இரண்டு டாஸ்மாக் கடைகள். பெண்கள், பள்ளி, கல்லூரி மாணவிகள், பொதுமக்களுக்கு ஏகப்பட்ட தொந்தரவுகள். ஏகப்பட்ட புகார்கள். இரண்டு வருஷமா இந்தக் கடைகளை அப்புறப்படுத்துமாறு எம்எல் கட்சி சார்பாக, பெண்கள் கழகம் சார்பாக போராடி வருகிறோம். மாவட்ட நிர்வாகத்துக்கு கடிதங்கள் எழுதினோம். தொடர்ந்து குரலெழுப்பினோம். டாஸ்மாக் நிர்வாகமோ மாவட்ட ஆட்சி நிர்வாகமோ கண்டுகொள்ளவில்லை. பேருந்துநிலையங்கள் போன்ற மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் கடை வைக்க கூடாது என்ற விதிகள் இருக்கிறது. இதற்கு விரோதமாகவே இந்தக் கடைகள் இருக்கின்றன.




பெண்கள், பொதுமக்களுக்கு தொந்தரவுகள் அதிகமாகி வந்த நிலையில் மாவட்ட நிர்வாகத்தின் அவசர கவனத்தைத் திருப்ப வேண்டுமென்பதற்காக "பூட்டுப் போடும்" போராட்டத்தை நமது கட்சி சார்பாக அறிவித்தோம். புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி தோழர்களும் சேர்ந்து கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களுடன் டாஸ்மாக் கடைகளை நோக்கி ஊர்வலமாகச் சென்றோம். எனது தலைமையில் சென்ற ஊர்வலத்தை காவல்துறை தடுத்து நிறுத்தியது. எல்லாரையும் கைது செய்து மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

மாலையில் எங்களோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்று கூறி என்னையும் தோழர்கள் சிம்புதேவன், மாணிக்கம், ஏழுமலை, புஜதொமு தோழர்கள் குமார், பாபு, சரவணன் ஆகியோரை இருக்க வைத்துவிட்டு மற்றவர்களை விடுவித்து விட்டார்கள். எங்களை வஞ்சகமாக தொரப்பாடி சிறையில் அடைத்து விட்டனர். டாஸ்மாக் மாவட்ட அதிகாரி, வடக்கு காவல்நிலைய இன்ஸ்பெக்டரை வற்புறுத்தி எங்களை சிறையில் தள்ள வைத்து விட்டார் என்பது பிறகு தெரிய வந்தது. நமது கட்சி தொடர்ந்து மக்கள் பிரச்சினைக்காக எனது தலைமையில் போராடி வருகிறது. நான்கு நாட்களுக்கு முன்பு கூட சாலை விரிவாக்கத்தால் பாதிக்கப்படும் 150 குடும்பங்களின் பாதுகாப்புக்காக சாலைமறியல் போராட்டத்தை நடத்தினோம். நெடுஞ்சாலைத் துறை அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்தக் குடும்பங்கள் அப்புறப்படுத்தப்படாமல் தடுத்து நிறுத்தினோம். "மாற்று இடங்கள் வழங்கப்படும்" என்ற உறுதிமொழியையும் பெற்றோம். இது போன்ற போராட்டங்களால் எரிச்சல் அடைந்தவர்கள் எங்களை சிறையில் தள்ள அழுத்தம் கொடுத்துள்ளனர்.

சிறையில் 10 நாட்கள் நானும் தோழர்களும்

இருந்தோம். நமது மாநிலச்செயலாளர் ஆசைத்தம்பி, ஏஅய்சிசிடியு சிறப்புத்தலைவர் இரணியப்பன், வழக்கறிஞர் அதியமான் உள்ளிட்டோர் சிறையில் எங்களை சந்தித்து பாராட்டினார்கள். ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை சந்தித்து கண்டனத்தை பதிவு செய்தனர்.

நான் இருந்த பெண்கள் சிறையில் 180 பேர் இருந்தனர். பெரும்பாலானவர்கள் ஏழைகள், தலித்துகள். சிறுகுற்றங்கள் செய்தவர்கள். போலீஸ்காரர்கள் பொய்வழக்கு போட்டு பலரை சிறையில் தள்ளி உள்ளனர். வேலையின்மை, வறுமை காரணமாக டாஸ்மாக் சாராயத்தை வாங்கி விற்ற சிலர் மீது 'கள்ளச்சாராய' வழக்கு போட்டு உள்ளே தள்ளி உள்ளனர். பேப்பர் மூலம் நமது போராட்டச் செய்தியை அறிந்து கொண்ட பெண் சிறைவாசிகள் தங்கள் துயரங்களை என்னிடம் மனம் விட்டு கூறினர். சட்டரீதியான உதவியும் கேட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அமைப்பை ஒரு பெண் தலைமைதாங்கி நடத்துகிறார் என்பதை அறிந்த ஜெயிலர் மரியாதையுடன் நடந்து கொண்டார். நாற்காலியில் உட்கார வைத்து பேசினார். மருத்துவ செவிலியர் அன்போடு கவனித்து கொண்டார். சற்றும் எதிர்பாராத விதமாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் என்னை சிறையில் சந்தித்து நலம் விசாரித்தார்.

10 நாட்களுக்குப் பிறகு 28ம் தேதி நாங்கள் ஜாமினில் விடுவிக்கப்பட்டோம். சிறை வாசலிலேயே கட்சித் தோழர்கள், நண்பர்கள், உறவினர்கள் சூழ்ந்து கொண்டு வரவேற்றனர். கொடிகள், தாரை தப்பட்டைகளுடன் எங்களுக்கு மாலை அணிவித்து முழக்கங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். சில வருடங்களுக்கு முன்பு கூட 5 நாள் சிறை சென்று வந்துள்ளேன். ஆனால் இந்த முறை தோழர்களும் நண்பர்களும் அளித்த வரவேற்பும் உற்சாகமும் நமது எம்எல் கட்சி போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றியாகவே நினைக்கிறேன்.

சிறையில் வைத்தால் நாங்கள் பயந்து முடங்கி விடுவோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலூர் பஸ் ஸ்டாண்டில் உள்ள கடைகளை மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளை நிரந்தரமாக மூடப்படும்வரை எங்களுடைய போராட்டம் தொடரும். ஏழைகள், பெண்களது வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் மதுவுக்கு எதிராக, மது இல்லா தமிழ்நாட்டிற்காக எம் எல் கட்சியும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகமும் தொடர்ந்து போராடும் என தோழர் சரோஜா உறுதிபட தெரிவித்தார்.

**உரையாடல் தொகுப்பு: இளவழகன்**

## அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவே பதவி விலகு!

## மோடி அரசே தேசத்திடம் மன்னிப்பு கேள்!!

அண்ணல் அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தை வெறுக்கும் பாஜக கூட்டத்தின் உள்ளார்ந்த எண்ணம் அமித்ஷா பேச்சின் மூலம் வெளிப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 75 வது ஆண்டு கொண்டாட்டத்தின் போது, நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அம்பேத்கர் பெயர் ஓங்கி ஒலிப்பதை பொறுத்துக் கொள்ள முடியாத அமித்ஷா கூட்டம், "அம்பேத்கர் பெயரைச் சொல்வதைவிட ஆண்டவன் பெயரைச் சொன்னால் மோட்சத்துக்கு போகலாம்" என்று பேசி நாடாளுமன்றத்திலேயே அம்பேத்கரை அவமதித்துள்ளார். அரசமைப்புச் சட்டத்தின் பேரால் பதவியேற்றுக் கொண்ட அமித்ஷா இனியும் அமைச்சராக தொடரக் கூடாது. உடனடியாக பதவி விலக வேண்டும்.

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப்போல பிரதமர் மோடி அமித்ஷாவின் வெறுப்புப் பேச்சை நியாயப்படுத்தி பேசியிருக்கிறார். இதற்காக மோடி தேசத்திடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) வலியுறுத்துகிறது.

அமித்ஷா- மோடி பேச்சை கண்டித்தும் மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சிகளை நடத்துமாறு கட்சி அமைப்புகளுக்கு இகக(மாலெ) அழைப்பு விடுக்கிறது.

இந்த தருணத்தில், ஏற்கனவே கட்சி அறிவித்துள்ள "அரசமைப்புச் சட்ட பரப்புரை இயக்கத்தை" இன்னும் விரிவாக, வலுவாக எடுத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கிறது.

**பழ.ஆசைத்தம்பி**
**மாநிலச் செயலாளர்**

**இகக(மாலெ) தமிழ்நாடு**

*19-12-2024*, சென்னை *-48*

# அதானியின் லஞ்ச ஊழல்: அமெரிக்காவில் கைது செய்ய பிடி ஆணை! இந்தியாவிலோ நடவடிக்கையே இல்லை!

அதானி குழுமம் பல பில்லியன் டாலர் லஞ்ச ஊழலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அமெரிக்க நீதித்துறையால் கௌதம் அதானி மீதும் அவரது மருமகன் சாகர் அதானி மீதும் கைது பிடி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இது அதானியின் ஊழல் தொழில் நிறுவன பேரரசின் மீது இதுவரை தொடுக்கப்படாத மிகப்பெரிய தாக்குதலாகும்.

2023 ஜனவரியில், ஹிண்டன்பர்க் வெளியிட்ட தகவல்கள், மோடி ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அதானி குழுமத்தின் அபரிமிதமான வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த மிகப்பெரிய தொழில் நிறுவன மோசடியை வெளிப்படுத்தி, முழு வணிக உலகையும் அதிர்ச்சியடையச் செய்தன. தொடர்ந்து ஹிண்டன்பர்க் அறிக்கைகளும், அமைப்பாக்கப்பட்ட குற்றம் மற்றும் ஊழல் அறிக்கை திட்டத்தின் ( OCCRP) விசாரணையால் வெளிப்பட்ட தகவல்களும், குழுமத்தின் வெளிநாட்டு போலி நிறுவனங்களின் சிக்கலான வலைப்பின்னலையும், அந்த வலைப்பின்னல் அமைப்புக்கு இந்திய கட்டுப்பாட்டு அமைப்புகளின் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தின. 'இந்தியாவுக்கு எதிரான முழுமையான சதி' என இதனை மோடி அரசு நிராகரித்தது. மேலும், செபியின் (SEBI) தலைவர் அதானியின் ஊழல் சங்கிலியுடன் தொடர்புடையவர் என குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் உச்ச நீதிமன்றம் செயலற்ற செபி மீது நம்பிக்கை வைத்தது. ஹிண்டன்பர்க்கின் அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளின் காரணமாக, அதானியின் பங்குகள் பாதிக்கப்பட்டாலும், உலகளாவிய அளவில் அதானி குழுமத்தின் செயல்பாடுகளில் பெரும் எதிர்ப்பை எதிர்கொண்டாலும், இந்தியாவில் அதானி தண்டனை கிடைக்கும் என்ற கவலையே இல்லாதவராக இருக்கிறார்.

இந்த முறை, குற்றச்சாட்டுகள் அமெரிக்க நீதித்துறையிலிருந்து வந்துள்ளன. அதுமட்டுமல்ல, அமெரிக்க புலனாய்வு அமைப்புகளும் அமெரிக்க பங்கு பத்திரங்கள் & பங்கு பரிமாற்ற ஆணையம் (SEC) சேகரித்த உறுதியான விசாரணையாலும் ஆதாரங்களாலும் உருவாக்கப்பட்ட ஆவணங்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் வலுவானவையாக இருக்கின்றன. அதானி குழுமம் லஞ்சம் அளிக்கும் குற்றத்தை இந்தியாவில் செய்திருக்கலாம், ஆனால், இப்படிச் செயல்பட்டதால், அதானி குழுமம் அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள கடுமையான லஞ்ச தடுப்புச் சட்டங்களை மீறியுள்ளது. முதலீடு செய்யும் அமெரிக்க பொதுமக்களை ஏமாற்றியது, உலகளாவிய நிதி நிறுவனங்களை ஏமாற்றும் நோக்கத்தில் பல மோசடிகள் செய்தது, தகவல்களை மறைப்பது ஆகியவை மட்டுமின்றி, நீதி நிர்வாகமுறை செயல்பட விடாமல் தடுத்தல் ஆகியவையும் குற்றச்சாட்டுகளில் அடங்கும். அதானி குழுமத்தின் சந்தேகத்திற்குரிய செயல்பாடுகளை விசாரிக்கவும், குற்றம் சாட்டவும் இந்திய புலனாய்வு அமைப்பு (CBI), செபி (SEBI) மற்றும் இந்திய நீதித்துறை அமைப்புகள் செய்ய வேண்டியதை அமெரிக்க அமைப்புகள் (FBI, SEC மற்றும் அமெரிக்க நீதித்துறை) செய்துள்ளன.

அதானி குழுமத்தின் மீதான குற்றவியல் வழக்குகள் எதிர்காலத்தில் என்னவாகும் என்பதைக் கணிக்க முடியாத நிலையிருக்கிறது. ஆனாலும் நாம் சிலவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது: டிரம்ப் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு அதானி வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்; அமெரிக்க ஆற்றல் (மின் சக்தி) உற்பத்தியில் $10 பில்லியன் முதலீடு செய்வதாகவும், 15,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறார். இவற்றுக்கெல்லாம் என்ன பொருள் என்பது உலகம் அறிந்ததுதான்.

இருந்தபோதும், அதானி குழுமம் தனது $600 மில்லியன் பத்திர வெளியீட்டை ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது; அதானியின் பங்குகள் அனைத்தும் பாதிக்கப்பட்டன; முக்கியமாக, இரண்டு நீண்டகால மற்றும் பரவலாக எதிர்க்கப்பட்ட அதானி ஒப்பந்தங்களை (விமான நிலையங்களை மேம்படுத்துவதையும் மின்சார வழித்தடங்கள் அமைத்தலையும்) கென்யா ரத்து செய்தது. இவை போன்ற விளைவுகளை நாம் ஏற்கனவே கண்டுவருகிறோம். பங்களாதேஷுடன் உள்ள அனல் மின் ஒப்பந்தமும் இலங்கையில் உள்ள காற்றாலைத் திட்டமும் கென்யாவின் பாதையில் பயணிக்கலாம்.

கவுதம் அதானிக்கு நரேந்திர மோடியுடன் உள்ள நெருங்கிய உறவையும், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே உள்ள முக்கியத்துவ மிக்க

ராஜதந்திர உறவுகளையும் பயன்படுத்தித்தான் கடந்த பத்தாண்டுகளில் அதானி குழுமத்தின் மிகப்பெரிய வளர்ச்சி, பெரும்பாலும் கட்டமைப்புத் துறையிலும் மின் சக்தி/ எரிசக்தி துறையிலும் நடந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள சர்ச்சைக்குரிய கார்மைக்கேல் நிலக்கரி சுரங்கம், இஸ்ரேலில் உள்ள ஹைஃபா துறைமுகம் முதல், இலங்கையில் உள்ள கொழும்பு துறைமுகம், பங்களாதேஷுடன் உள்ள மின் ஒப்பந்தம் வரை, உலகின் ஒவ்வொரு அதானி ஒப்பந்தமும் அதானி-மோடி கூட்டணி நீடிப்பதால்தான் சாத்தியமாகிறது. உண்மையில், அதானி பேரரசை உருவாக்குவதுதான் மோடி ஆட்சிக் காலத்திய இந்திய வெளிநாட்டு கொள்கையின் முக்கியமான நோக்கமாக மாறியிருக்கிறது. அதானியின் நிலக்கரி சுரங்கத் தொழில், அனல் மின்சாரம், கட்டுமான திட்டங்களில் உள்ள பெரும் ஈடுபாடு, அக்குழுமத்தை சுற்றுச்சூழல் மாசு, காடுகள், உயிரினங்கள், பூர்வீக சமூகங்களை அழிப்பதில் முக்கிய பங்காளியாக ஆக்கியிருக்கிறது; பாலஸ்தீனியர்களின் தொடர்ச்சியான இனப்படுகொலையில் அவரது ஒத்துழைப்பை மறைத்துக்கொண்டு, அதானி தன்னை புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் வெற்றிவீரனாக காட்டுவதற்கு தீவிரமாக முயற்சிக்கிறார்; லண்டன் அறிவியல் அருங்காட்சியகத்தில் கிரீன் எனர்ஜி கேலரியைக் கட்டமைப்பதற்கு தன் பணத்தைச் செலவிடுகிறார். இது குழுமத்தின் மீது படிந்துள்ள ‘மாசு அழுக்கை பச்சை ரத்தம் தடவி சுத்தம் செய்வதை’ நோக்கமாக மட்டும் கொண்டதல்ல: சூரிய சக்தி துறையில் அதிக மதிப்புள்ள மின் விற்பனை ஒப்பந்தங்களைப் பெற லஞ்சம் கொடுத்து பெரும் லாபத்தைப் பெறவும் அதானி திட்டமிட்டுள்ளார். இந்த அம்சங்கள் (அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட) குற்றச்சாட்டு ஆவணத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில், மோடி அரசு திட்டமிட்ட முறையில் துறைமுகங்கள், விமான நிலையங்கள், சாலைகள், மின் நிலையங்கள், காடுகள், சுரங்கங்கள் மற்றும் நிலத்தை அதானி குழுமத்திற்கு ஒப்படைத்து வருகிறது, பாஜக அல்லாத மாநில அரசுகளும் அதானி குழுமத்தை ஈர்க்கும் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன.

உண்மையில், இந்தியாவில் அதானி லஞ்ச ஊழலிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள பாஜக முயற்சிக்கிறது, குற்றச்சாட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அய்ந்து மாநிலங்களில் நான்கு - சத்தீஸ்கர், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் மற்றும் ஒடிசா - அப்போது பாஜக அல்லாத அரசுகளின் கீழ் இருந்தன என்பதைக் குறிப்பிடுகிறது. ஆனால் மின் விற்பனை ஒப்பந்தங்கள் மத்திய பொது துறையால் (SECI) வழிநடத்தப்பட்டன என்பதையும், இன்று ஆந்திர பிரதேசம், ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் போன்ற மாநிலங்கள் அனைத்தும் பாஜக மற்றும் அதன் கூட்டணியினரால் ஆளப்படுகின்றன என்பதையும் மறைக்க முடியாது. (கௌதம்) அதானி மாமா-(சாகர்) அதானி மருமகன் கூட்டணி முறையாக கணக்கிட்ட, ஜிகா வாட் கணக்கில் அதிர்ச்சி அளிக்கும் லஞ்சக் குறிப்புகளை முழுமையாகக் கொண்ட லஞ்ச ஊழலை விசாரிக்க நம்பகமான, விரிவான விசாரணையை அறிவிக்க மோடி அரசை எது தடுக்கிறது?

யாருக்கு பணம் கொடுத்தால் காரியம் ஆகும் என்பதை ஆராய்ந்து சரியான அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துள்ளது அதானி குழுமம். இவ்வாறு உத்திரவாதம் செய்யப்பட்ட அதானி குழுமத்தின் மிகப்பெரிய லாபங்கள், மக்கள் மீது அதிக கட்டணங்களை விதிப்பதன் மூலமும் வரிகளை வசூலிப்பதன் மூலமும் பெறப்படுகின்றன. உலகின் அனைத்துப் பகுதியிலும் ஹிண்டன்பர்க் அறிக்கை அல்லது குற்றவியல் வழக்கு அதானி குழும பங்குகளில் சரிவை ஏற்படுத்தும் போது, இழப்பு முதன்மையாக இந்தியாவின் சில்லறை முதலீட்டாளர்களால் (அதாவது, சாதாரண மக்களால்) தாங்கப்படுகிறது.

அமெரிக்கச் சட்டங்களை (வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம்) மீறியதாலோ அல்லது அதானி குழுமம் அமெரிக்காவையும் அமெரிக்க முதலீட்டாளர்களையும் பாதிக்கும் பல மோசடிகள் செய்ததாலும் அமெரிக்க நீதித்துறையால் அதானி குழுமம் குற்றம் சாட்டப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தியாவில் நடந்த ஊழலை விசாரிக்காதிருப்பதும், மறுப்பதும் சட்டத்தின்படி இயங்கும் குடியரசாகவும் பொருளாதாரமாகவும் இருக்கும் இந்தியாவைப் பற்றிய நம்பிக்கையைக் கடுமையாகப் பாதிக்கும். மோடி-அதானி கூட்டணி இந்தியாவின் தற்போதைய பொருளாதார அமைப்பின் மீதும் அரசியல் ஒழுங்கின் மீதும் செலுத்தும் கட்டுப்பாட்டை வைத்துப் பார்த்தால், அதானி குழுமமும் மோடி அரசும் மறுப்பு அறிக்கைகளை அளிக்கும் என்று மட்டுமே எதிர்பார்க்க முடியும். மோடியின் செல்வாக்கில் இயங்கும் ஊடகங்கள் மோடியின் - அதானியின் அறிக்கைகளை பெரிய அளவில் வெளியிட்டு மகிழலாம். அதேசமயம், வலுவான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழும் கோரிக்கைகளை அடக்குவதற்கான நடவடிக்கைகளை மட்டுமே மோடி அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியும். ஆனால், இந்தியாவில் ஜனநாயகம் வாழ வேண்டும் என்றால், மோடி-அதானி கூட்டணியை அனைத்து சாத்தியமான வழிகளிலும் வீழ்த்தியாக வேண்டும்.

**தமிழாக்கம்: மதிவாணன்**

# நவம்பர் தேர்தல் முடிவுகள்: சுட்டிக்காட்டும் குறிப்புகளும் சவால்களும்

**திபங்கர்**

ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் முற்றிலும் மாறுபட்ட இரண்டு எதிரெதிர் காட்சிகளை வெளிப்படுத்துகின்றன. முஸ்லிம்களுக்கு எதிரான கடும் வெறுப்பு இயக்கத்தின் மீது சவாரி செய்து ஜார்க்கண்டை வெற்றி கொள்ளலாம் என்ற பாஜகவின் தீவிரமான முயற்சி மாபெரும் தோல்வியைத் தழுவியது. ஆனால் மகாராஷ்டிராவில் அந்தக் கட்சி மக்களவை தேர்தல்களில் பெற்ற தோல்வியை வெற்றியாக மாற்றுவதை ஒருவாறு சாதித்து விட்டது. மேலும் அது பெற்ற வெற்றியின் அளவு எந்த ஒரு எளிய விளக்கங்களையும் மீறுகிறது. இந்த இரண்டு சட்டமன்றத் தேர்தல்களோடு கூட இரண்டு மக்களவை தொகுதிகள் உள்ளிட்ட 14 மாநிலங்களில் பரவியுள்ள 48 சட்டமன்ற தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெற்றது. மகாராஷ்டிராவின் நான்டட் தொகுதியில் மிகக் குறுகிய வாக்குகள் வித்தியாசத்தில் தான் காங்கிரஸ் வெற்றி பெற்றது. என்றாலும் கூட இரண்டு மக்களவைத் தொகுதிகளையும் அது தக்கவைத்துக் கொண்டது. ஆனால் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் பாஜக/தேஜகூ தனது வலிமையை ஓரளவு அதிகரிப்பதில் ஒருவாறு வெற்றிபெற்று விட்டது. நிர்வாகக் கட்டுப்பாடுகள், பெருமளவு முஸ்லிம் வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறித்தது ஆகியவை மூலம் பாஜக/தேஜகூ உபியில் பயனடைந்தது என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பல வழிகளில், இந்த நவம்பர் தேர்தல் முடிவுகளையும் அதற்கு முந்தைய ஹரியானா, ஜம்மு&காஷ்மீர் தேர்தல் முடிவுகளையும் 2024 மக்களவைத் தேர்தல்களில் பாஜகவின் பெரும்பான்மை சரிந்ததற்குப் பிறகுள்ள ஆரம்ப உண்மையை அறிந்து கொள்வதற்கான நிகழ்வுகளாக பார்க்கலாம். இந்தக் குட்டி தேர்தல் போராட்டச் சுற்றில் வெற்றி பெற சங்கி-பாஜக நிறுவனம் விரிவான திட்டங்களைத் தீட்டியது. அதன் திட்டங்களுக்கு ஹரியானாவிலும் மகாராஷ்டிராவிலும் பலன் கிட்டியது. இந்த இரு மாநிலங்களிலும் ஓபிசியினரை வலுப்படுத்துதல், மதவெறித் துருவச் சேர்க்கையை தூண்டுதல் ஆகியவற்றுக்கு ஈடுசெய்யும் விதத்தில் எதிர்கட்சியினரின் வாக்குகளை உள்ளூர் மட்டத்தில் சாமர்த்தியமாக சிதறடிப்பது, மாபெரும் பணபலத்தை பயன்படுத்துவது ஆகிய திட்டங்களை இணைத்ததன் மூலம் பாஜகவின் வெற்றி முன்னதாகவே திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்பட்டது. ஹரியானாவிலும் மிகக் குறிப்பாக மகாராஷ்டிராவிலும் பாஜக/தேஜகூ-க்கு மக்களவைத் தேர்தல்கள் ஒரு எச்சரிக்கை மணியாக வந்தன. நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பிந்தைய இடைப்பட்ட காலத்தை பாஜக முழுமையாக பயன்படுத்திக் கொண்டது. இந்தியா கூட்டணியின் தேர்தல் செயல்பாட்டை விட மிகவும் சாமர்த்தியமாகவும் வேகமாகவும் அது செயல்பட்டது.

2022-ல் உத்தவ் தாக்கரே அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மோடி அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட 'ஆப்பரேசன் தாமரை நடவடிக்கையின் நீட்சியே பாஜகவின் தேர்தல் உத்திகள் என்பதையும் நாம் குறித்துக் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை முழுவதுமாக கேலிக்கூத்தாக்கி, முதலில் ஜூன் 2022-ல் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதைக்கொண்டு, 2024 இல் மகாராஷ்டிரா தேர்தல்களில் பாஜகவால் வெற்றிபெற முடிந்திருக்காது. தேர்தல்கள் அறிவிக்கப்படுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னதாக மட்டுமே தொடங்கப்பட்ட முக்யமந்திரி மாஜி லட்கி பஹின் யோஜனா (பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ₹1500 வழங்கும் திட்டம்), ஆர்எஸ்எஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட கச்சிதமான நுண்மேலாண்மை ஆகியவற்றின் தாக்கம் பற்றி தற்போது அனேக விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் மகாராஷ்டிராவில் முடிவுகளை எடுப்பதில் அதானி செல்வாக்குமிக்க ஒரு அச்சாணி பாத்திரம் ஆற்றியதை நாம் புறக்கணித்து விட முடியாது. மேலும் திகைப்பூட்டுகிற அளவிற்கு அப்பட்டமாக பணம் பயன்படுத்தப்பட்டதையும் மகாராஷ்டிரா இதற்கு முன் ஒருபோதும் கண்டதில்லை. இந்தியத் தேர்தல் ஆணையமும் கூட இந்தத் தேர்தல்களில் கிட்டத்தட்ட 1000 கோடி மதிப்பிலான பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக ஒப்புக் கொண்டுள்ளது. இது முந்தைய தேர்தலில் பறிமுதல் செய்யப்பட்ட அளவை விட கிட்டத்தட்ட ஏழு மடங்கு அதிகமானதாகும்.

பாஜகவிற்கு ஹரியானாவிலும் மகாராஷ்டிராவிலும் பலன் தந்த உத்திகள் ஜார்கண்டில் பெரும் தோல்வியைத் தழுவியது. மக்களவைத் தேர்தல்களுக்கு முன்னதாக ஹேமந்த் சோரனை சிறைக்கு அனுப்பிய பழிவாங்கும் அரசியலும் ஆளுநர் அலுவலகத்தின் முட்டுக்கட்டையிடும் பாத்திரமும் ஒரு முழுமை பெற்றது. இதே போன்ற உத்தியை ஜார்கண்டிலும் மோடி அரசாங்கம் கையாண்டது. பெரும் எண்ணிக்கையிலான கட்சித்

தாவல்களை ஏற்படுத்துவதன் மூலம் சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக ஹேமந்த் சோரன் அரசாங்கத்தைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட ஆழமான சதியை முன்னாள் முதலமைச்சர் சம்பை சோரன் பாஜகவிற்கு தாவியது சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தேர்தல்களில் பாஜகவின் வெறுப்புப் பரப்புரையை தோற்கடிப்பதற்கு முன்பு ஹேமந்த் சோரன் அரசாங்கம் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு திட்டத்தில் மாட்டிக் கொள்ளாமல் தாக்குப்பிடிக்க வேண்டியிருந்தது. பழிவாங்கும் அரசியல், ஆட்சிக்கவிழ்ப்பு முதல் வெறுப்புப் பரப்புரைகள், சமூகப் பொறியியல் வரையிலான பாஜகவின் அனைத்து கருவான திட்டங்களும் ஜார்க்கண்டில் தோற்றுவிட்டன அல்லது திருப்பித் தாக்கின. ஆக அந்தக் கட்சி ஜார்க்கண்டில் ஒரு முழுவிரிவான தோல்வியைத் தழுவிக் கொண்டது.

ஜார்க்கண்டில் அம்மாநில பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தமுள்ள 28 தொகுதிகளான எஸ்டி தனித்தொகுதிகளிலிருந்து வெற்றிபெற்ற ஒரே பாஜக வேட்பாளர் சம்பை சோரன் மட்டுமே. கொட்டா-தியோகர் மண்டலத்தில் பெருமளவிலும், பலமு, வடக்கு சோட்டாநாக்பூர் கோட்டத்தின் ஒருசில பகுதிகளிலும் கூட பாஜக தோல்வியை சந்தித்துள்ளது. ஜார்க்கண்டில் அவர்களுடைய நிலத்தையும் வாழ்வாதாரத்தையும் அவர்களது மகள்களையும் 'வங்கதேச ஊடுருவல்'காரர்கள் என அழைக்கப்படுகிறவர்களிடம் பழங்குடியின மக்கள் இழந்து விடுவார்கள் என பழங்குடியின மக்களை அச்சுறுத்தி முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களை நிறுத்தும் பாஜகவின் வெறுப்பு செயல்திட்டத்தின் உறுதியான நிராகரிப்பு மிகவும் மறுஉறுதியளிக்கிற செய்தியாகும். பாஜகவின் கூட்டணியான அனைத்து ஜார்கண்ட் மாணவர் சங்கத்திற்கு திறன்மிக்க மாற்றாக ஜெய்ராம் மஹதோ தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்ட ஜார்கண்ட் லோக்தந்திரிக் கிரந்திகாரி மோர்ச்சாவின் உருவாக்கத்தால், அதன் பெயருக்கு மதிப்பு வழங்கும் எந்தவொரு கூட்டணியையும் பாஜக கிட்டத்தட்ட இழந்துவிட்டது. அதற்கு மாறாக ஜேஎம்எம், காங்கிரஸ், ஆர்ஜேடி, சிபிஐஎம்எல் ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய இந்தியா கூட்டணியில் ஒருவருக்கொருவர் ஈடு செய்தனர். மேலும் பாஜகவின் வெறுப்பு நிறைந்த பிரித்தாளும் செயல்திட்டத்திற்கு வலிமையான சமூக, அரசியல் தடுப்பாக அது நின்றது.

முந்தைய மார்க்சிய ஒருங்கிணைப்பு குழு, சிபிஐஎம்எல் உடன் ஒன்றிணைந்ததும், தோழர் ஏகே ராய், சிபிஐஎம்எல் ஆகிய இயக்கங்களின் மரபுகளும் ஒன்றிணைந்ததும், தன்பாத்-பொக்காரோ பகுதியில் பாஜகவை பின்னுக்கு தள்ளியதில் குறிப்பிடத்தக்க பங்காற்றியது. ஜார்க்கண்ட் சட்டமன்றத் தேர்தல்களில் சிபிஐஎம்எல் முதன்முதலாக ஒரு கூட்டணியில் போட்டியிட்டது. இந்த தேர்தல்களில் சிபிஐஎம்எல் நான்கு வேட்பாளர்களை மட்டுமே நிறுத்தியது. அதிலும் கூட ஒரு தொகுதியில் ஜேஎம்எம் கட்சி நட்பு போட்டியை திணித்தது. கட்சியின் பாரம்பரியமான பகோதர் தொகுதியை இழந்த போதும் தன்பாத் மாவட்டத்தின் நிர்சா தொகுதியையும், அடுத்தடுத்த அய்ந்து தொடர் தோல்விகளுக்குப் பிறகு சின்ரி தொகுதியையும் திரும்பப் பெற்றது. இது ஜார்க்கண்டின் இடது புத்தெழுச்சியை மீண்டும் உற்சாகமூட்டுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது. மேலும் கார்ப்பரேட் கொள்ளையையும் மதவெறி வெறுப்பையும் தடுத்து நிறுத்துவதில் இது பெரும் பங்காற்றும்.

மகாராஷ்டிராவில் எம்விஏ கூட்டணிக்கு வெளியே போட்டியிட்டு இடதுகள் இரண்டு தொகுதியை பெற்றுள்ளனர். பால்கர் மாவட்டத்தில் தகனு (எஸ்டி) தொகுதியை சிபிஐஎம் தக்க வைத்துள்ளது. கோலாப்பூர் மாவட்டத்தில் சங்கோல் தொகுதியில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வென்றுள்ளது. மேற்கு வங்க இடைத்தேர்தலில் கொல்கத்தாவிற்கு அருகிலுள்ள 24 பர்கானா மாவட்டத்தின் தொழிற்சாலை பகுதியான நைகாட்டி தொகுதியில் சிபிஐஎம்எல்-லுக்கு சிபிஐஎம் ஆதரவு அளித்தது. அதன்மூலம் ஒரு பரந்த இடது ஒற்றுமைக்கான வாய்ப்புக்கு வழிகாட்டி உள்ளது. இடதுகள் தாங்கள் இழந்த தேர்தல் களத்தை மீட்டெடுப்பதற்கான அறிகுறிகள் இன்னும் தென்படவில்லை. ஆனால் பாஜகவின் வாக்குகள் சரிவதால் ஒரு பரந்த ஒற்றுமையை கட்டியெழுப்பும் முயற்சியை இடதுகள் விடாமல் தொடர வேண்டும். மேலும் மக்கள் எதிர்கொள்ளும் பற்றியெரியும் பிரச்சினைகள் மீது போராட்டங்களை கட்டியமைக்க வேண்டும்.

வரவிருக்கும் மக்களவைக் குளிர்கால கூட்டத் தொடருக்கு சற்று முன்னதாக, இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 75 ஆவது ஆண்டு மற்றும் வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் இயக்கத்தின் நான்காவது ஆண்டு நினைவிற்கு சற்று முன்னதாக இந்த நவம்பர் தேர்தல் முடிவுகள் வந்துள்ளன. அமெரிக்க நீதித் துறையால் அதானி குழுமம் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பது, அதானி குழுமத்தையும் மோசடி மோடி -அதானி கூட்டையும் மேலும் அம்பலமாக்கியுள்ளது. இடதுகளும் இந்தியா கூட்டணியும் மகாராஷ்டிரா தேர்தல் தோல்வியை ஒரு படிப்பினையாக நிச்சயம் எடுத்துக் கொள்ள வேண்டும். தொடரும் பாசிசத் தாக்குதலில் இருந்து இந்திய ஜனநாயகத்தைக் காப்பதற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். இந்தியாவின் பொருளாதார நெருக்கடி ஆழமாகிக் கொண்டிருக்கும் சூழலில் மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க வேண்டும்.

**தமிழாக்கம்– செந்தில்**

# அயம் சாரி அய்யப்பா

“அயம் சாரி அய்யப்பா” என்ற பாடல் பாடி அய்யப்பனையும், அய்யப்ப பக்தர்களையும் இழிவுபடுத்தி விட்டதாகக் கூறி பாடகர் கானா இசைவாணி, நீலம் பண்பாட்டு மையம் திரைப்பட இயக்குநர் பா.ரஞ்சித் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோவை மேட்டுப்பாளையம் காவல் நிலையத்தில் ‘அனைத்து அய்யப்ப பக்தர்கள்’ சங்கத்தினர் புகாரளித்தனர்.

கேரளாவில் இருக்கும் சபரிமலைக்கு பெண்கள் செல்வது குறித்த வழக்கை கடந்த 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் விசாரித்தது. அதில் பாலின பாகுபாட்டை முன்வைத்து பெண்களுக்கு உரிமை மறுக்கப்படக்கூடாது என்று தீர்ப்பளித்தது. அந்த நேரத்தில் தான் நீலம் பண்பாட்டு மையம் ஒருங்கிணைப்பில் “த கேஸ்ட்லெஸ் கலக்டிவ்” (சாதியற்ற கூட்டு) என்கிற இசைக்குழுவால் “அயம் சாரி அய்யப்பா” என்கிற பாடல் உருவாகி, பாடப்பட்டு வந்தது. அது, பெண்கள் கோயிலுக்குள் நுழையும் உரிமை உள்ளிட்ட பெண்களின் பல்வேறு உரிமைகளைக் கோரும் பாடல். அந்த உண்மையை மறைத்து, மொத்தப் பாடலும் குறிப்பிட்ட ஒரு மதத்திற்கு எதிரானதாக பொய்யான செய்தியை சங்கிகள் பரப்பி வருகின்றனர்.

என்ன உடை அணிய வேண்டும், என்ன வேலை செய்ய வேண்டும், திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, வேண்டாமா? இது அனைத்துமே பெண்களின் தனிப்பட்ட உரிமை, சுதந்திரம். யாரும் எதையும் பெண்கள் மீது திணிக்கக் கூடாது. நாகரிக மனித சமூகத்தின் இந்தக் கருத்துகளை நெற்றிப் பொட்டில் அடிப்பது போல பாடுகிறார் இசைவாணி. அடிப்படையில் சங்கிப் படையினருக்கு பெண்களின் சுதந்திரம் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து. ‘தாடிக்காரன் பேத்தி’ அய்யப்பன் கோயிலுக்கு ஏன் வரவேண்டும் எனக் கேட்கிறார்கள். அந்த தாடிக்காரனே ‘வைக்கம் வீரர்’ எனப் பெயர் பெற்றவர் தான். நம்பிக்கை வேறு, உரிமை வேறு. கம்யூனிஸ்டுகள் கோயில் நுழைவு போராட்டங்களை முன்னெடுப்பதும் இந்த அடிப்படையில் தான்.

நியாயம் கேட்கும் தருணங்களில் தாங்கள் நம்பும் கடவுளை ஒருமையில் அழைக்கும் வழக்கம் ஆத்திகர்களிடம் உள்ளது. அய்யப்பனிடம் அதேபோன்ற நியாயம் கேட்பு தான் இசைவாணி பாடியுள்ள பாடலின் தொடக்க வரிகளாகும். அதனை ஆத்திகர் கேட்டாலென்ன? ஆத்திகர் சார்பில் நாத்திகர் கேட்டாலென்ன? அதற்கு அய்யப்பன் தானே பதில் சொல்ல வேண்டும். இவர்கள் ஏன் குதிக்கிறார்கள்? இசைவாணியை இழிவாக சித்தரிப்பதும் அச்சுறுத்துவதும் பெண்களுக்கு எதிரான சங்கிக் கும்பல்களின் கருத்தியல் வெளிப்பாடே. மேலும் இது பெண்ணுரிமை, சமத்துவம், தமிழ்நாட்டின் நீண்டகால பகுத்தறிவு மரபு, அறிவியல் சிந்தனை, பன்மைத்துவ பண்பாடு மீதான தாக்குதலாகும்.

கேரளா ஸ்டோரி, காஷ்மீர் ஃபைல்ஸ் போன்ற திரைப்படங்களில் பொய் பரப்புரைகள் மூலம் உண்மைகளை திரிப்பதில் வல்லவர்கள் சங்கிக் கும்பல்கள். தற்போது கோத்ரா ரயில் விபத்து தொடர்பான த சபர்மதி ரிப்போர்ட் என்ற திரைப்படத்தின் மூலம் மற்றுமொரு பொய் பரப்புரையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். அதனை இந்த நாட்டின் பிரதமர் மற்ற தேஜகூ எம்பிக்களுடன் நாடாளுமன்ற வளாகத் திரையிடலில் கண்டு களிக்கிறார். உண்மை வெளிவந்து விட்டது என தனது எக்ஸ் தளத்தில் பதிவிடுகிறார். நா கூசாமல் பொய்களை கட்டவிழ்த்து விடும் சங்கிக் கும்பல்கள், அதிகாரத்தை நோக்கி உண்மையை உரக்கப் பேசுபவர்களை அச்சுறுத்துவதையும் தண்டிப்பதையும் செயல்திட்டமாகக் கொண்டுள்ளனர்.

அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதி, பாடப்பட்டு வரும் பாடலை தற்போது 2024 இல் அய்யப்ப பக்தர்கள் அய்யப்பன் கோவிலுக்கு மாலை போட்டு செல்கின்ற பருவத்தில் சர்ச்சையாக்கியுள்ளனர் சங்கிக் கும்பல்கள். இசைவாணி கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்றும், ஏசுவின் புகழ்பாடும் பாடல்களை பாடுபவர், அய்யப்பனை இகழ்ந்து பாடியுள்ளார் என்றும் மதவெறியை தூண்டிவிடுகின்றனர். தமிழ் சமூகத்தை மத அடிப்படையில் பிளவுபடுத்துவதன் மூலம் அரசியல் ரீதியாக அறுவடை செய்யத் திட்டம் போடுகிறார்கள்.

தமிழ் சமூகத்தை மத அடிப்படையில் பிளவுபடுத்தும் சங்கிக் கும்பல்களின் நீண்டகால திட்டம் எழுத்தாளர் பெருமாள் முருகனின் மாதொரு பாகன் நாவலை சர்ச்சையாக்கியதில் பெரிய அளவில் காணமுடிந்தது. கந்தர் சஷ்டி கவசம் குறித்த கருப்பர் கூட்டம் யூ ட்யூபர்கள் மீது வழக்குப் பதிவு, நயன்தாரா நடித்த அன்னபூரணி திரைப்படத்தை சர்ச்சையாக்கி அவரை மன்னிப்பு கடிதம் வெளியிட நெருக்கடிக்குள்ளாக்கியது, கர்னாடக இசைப் பாடகர் டிஎம் கிருஷ்ணாவிற்கு சங்கீத கலாநிதி பட்டம் வழங்க எதிர்ப்பு, பாஜகவின் வேல் யாத்திரை, உதயநிதியின் சனாதனம் குறித்த பேச்சுக்கு எதிரான கூச்சல்கள், தற்போது இசைவாணிக்கு எதிரான அச்சுறுத்தல் என இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. மக்களின் அடிப்படை தேவைகள் பற்றிய பற்றியெரியும் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

திமுக அரசின் அறநிலையத்துறை, பழனியில் நடத்திய முருகன் மாநாடு போன்ற நிகழ்ச்சிகள் வலதுசாரி சக்திகளுக்கு துணிச்சல் தந்துள்ளன. “தாடிக்காரன் பேத்திக்கு” ஆதரவாக திமுகவினர் பேசாதது ஆச்சரியமளிக்கிறது. தமிழகத்தை ஆளும்

‘பெரியாரின் வாரிசுகள்’, பெரியாரின் கருத்துகளை செயலூக்கமிக்க விதத்தில் பரப்புரை செய்ய வேண்டும். வைக்கம் போராட்டத்தின் நூறாவது ஆண்டு கொண்டாட்டத்தை இடதுசாரி அரசுடன் சேர்ந்து வெகுசிறப்பாக கொண்டாடிய திமுக அரசிடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும். அதேசமயம் தமிழ்நாட்டில், வலதுசாரிக் கருத்துகளின் அடாவடிக்கு எதிராக இடதுசாரிகளும் பெரியாரிய, அம்பேத்கரிய முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் விழிப்புடன் செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தமிழ்நாட்டின் பொதுவெளியில், சங்கிகளின் செயல்திட்டம் அம்பலப்படுத்தப்பட வேண்டும். சமூக ஊடகங்களில் பகுத்தறிவும் அறிவியல் சிந்தனையும் கோலோச்சுவதை உறுதிசெய்ய வேண்டும். அந்தவகையில் கானா பாடகர் இசைவாணியின் பக்கம் தமிழ்நாடு நின்றது மகிழ்ச்சிக்குரியது.

**–செந்தில்**

## அயம் சாரி அய்யப்பா

**அயம் சாரி அய்யப்பா;**
**நான் உள்ளே வந்தா என்னப்பா?**
**பயம் காட்டி அடக்கி வைக்க; இது பழைய காலம் இல்லப்பா– அயம் சாரி..**
**நான் தாடிக்காரன் பேத்தி;**
**இப்போ காலம் மாறிப் போச்சு**
**நீ தள்ளி வச்சத் தீட்டா**
**நான் முன்னேறுவேன் மாசா – அயம் சாரி..**
**ஜீன்ஸ் பேன்ட்டா புடவையான்னு**
**நானே முடிவு பண்ணிக்குவேன்**
**நர்ஸா நான் டாக்டரான்னு வளர்ந்து நானே சொல்லிக்குவேன்;**
**சிங்கிளா கம்மிட்டடா எல்லாம்**
**நான் எடுக்குற முடிவுல தான்.**
**திருப்பி அடிக்கவும் இப்போ**
**இருக்கு எனக்கு தைரியந்தான்.**
**ஸ்போர்ட்ஸா? டப்பாங்குத்தா?**
**ஃபிரியா விட்டா பாத்துக்குவேன்**
**தீட்டானதும் துப்பட்டாவா?**
**உங்க சடங்குல காரித் துப்பட்டா? – அயம் சாரி..**
**இது என்ன புதுசா ஒரு குழப்பம்;**
**தங்கச்சி உள்ள வந்தா என்ன நடக்கும்?**
**கொடுக்கலைன்னா எடுத்துக்க உரிமை;**
**எடுக்கலைன்னா எதுக்கு இந்த இளமை?**
**அடுப்படிக்கு ஆகாயம் பக்கத்திலே**
**படிச்சுபுட்டா எல்லாமே பாக்கெட்டிலே!**
**பிறப்பில் என்ன ரகசியம் இருக்கு?**
**திறக்கலன்னா கதவை ஒடைக்கணும்– அயம் சாரி..**
**வெட்கப்பட்டு நிக்கணுமா**
**அவ நெத்தியில் பொட்டு வைக்கணுமா?**
**கஷ்டப்பட்டு நான் படிச்சு**
**குரங்கு கையில சிக்கணுமா?**
**என் லைபு எனக்குடா**
**உனக்கு சோகம் எதுக்குடா?**
**என்னோட சுதந்திரம்;**
**யாரு எனக்கு கொடுக்கணும்?**
**விரும்பிய வாழ்க்கைத் துணையை**
**நானே தேர்ந்து எடுத்துக்கணும்;**
**சுய மரியாதை இருக்கு...**
**நான் எதுக்குடா கலங்கணும்?**
**அயம் சாரி அய்யப்பா...!**

*2018ல் சென்னையில் நடைபெற்ற மார்கழி மக்களிசையில் கானா இசைவாணி பாடிய பாடல்.*

*பாடுவோம்; பரப்புவோம்!*



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.12.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்...



ஆந்திரா




தெலுங்கானா



சேலம்



கோவை



கடலூர்




குமரி



நெல்லை




சென்னை

Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh